# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 20 | புதன்கிழமை | (03-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 75



ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.


# தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றார்

## நிதி தேர்தலுக்கு பயன்படுவதாக குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மற்றுமொரு அதிரடி நடவடிக்கையாகத் தனது நிறைவேற்று அதிகாரத்தைப்பாவித்து தேசிய லொத்தர் சபையை நேற்றையதினம் பொறுப்பேற்றுக்கொண்டார்.**

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழ இயங்கிவந்த தேசிய லொத்தர்சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது விசேட அதிகாரத்தின்மூலம் தனது பொறுப்பின்கீழ் கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதிச் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜனாதபதி சந்திரிகா குமாரதுங்க தனது விசேட அதிகாரத்தைப் பாவித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தேசிய லொத்தர்சபையைப் பொறுப்பேற்றுள்ளார்.



தேசிய லொத்தர்சபையின் நிதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர்கள் கோரினால் பாதுகாப்புப் பலப்படுத்தப்படும்

### இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படவுள்ளது.

தமது பாதுகாப்பிற்கு பொலிஸாருடன் மேலதிக இராணுவத்தினரும் நியமிக்கப்படவேண்டும் என்று எந்தவொரு வேட்பாளரும் கோரும் பட்சத்தில் அவருக்கு அத்தகைய் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் சுமிதபெரேரா தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களுக்கான பாதுகாப்பைப் பொறுத்தவரையில், வடக்கு, கிழக்கு வேட்பாளர்களின் பாதுகாப்பிலேயே கூடிய கவனம் செலுத்தவுள்ளதாகவும், இராணுவப் பேச்சாளர் சுமித பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வேட்பாளர் கொலை அமெரிக்கா கண்டனம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட முன்வந்த சி.சுந்தரம்பிள்ளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இக்கொலை தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ரிச்சாட் பௌச்சர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்கண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எம்மால் வழங்கக் கூடியதை புலிகளிடம் எடுத்துக்கூறுவோம்

### இந்து பத்திரிகைக்கு ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)

புலிகளுடனான பேச்சுக்கு ஏற்ற தெளிந்த உபாயம் ரணில் விக்கிரமசிங்காவிடம் இருக்கவில்லை. அவர் புலிகளுக்குப பலவிதமான வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். தேர்தலுக்கு முன்னர் தமக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி மூன்று, நான்கு தடவைகள் புலிகள் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டிருப்பது இக்கூற்றை உண்மையென நிரூபிப்பதாக உள்ளது. இந்த வாக்குறுதிகள் எவையாக இருக்கலாம் என்று எமக்குத் தெரியாது. அவைகள் இரகசியமானவை என்பது மட்டும் வெளிப்படை. அத்தகைய ஒன்றை எம்மால் செய்ய முடியாது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவில் இருந்து வெளிவரும் இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில தெரிவித்துள்ளார்.

தம்மிடம் பேச்சுக்கான தெளிவான தந்திரோபாயம் இருப்பதாகக் கூறிய சந்திரிகா இதற்கு முன்னர் 2 தடவைகள் தாம் செய்தது போன்று ஒரு நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த கால அட்டவணையை முன்வைப்போம். எம்மால் எவற்றை முன்வைக்க முடியும் என்பதை நாம் வெளிப்படையாகப் புலிகளிடம் கூறுவோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. ஐ.தே.க வேட்பாளர் இருவர் விலகிக் கொண்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே. கட்சி வேட்பாளர்கள் இருவர் தாம் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஐ.தே.கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை வைத்தியசாலையில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்தே இவர்கள் இருவரும் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த காசுபதி பூபாலரத்தினம், மண்டூரைச் சேர்ந்த அமரசிங்கம் விநாயகமூர்த்தி ஆகிய இருவருமே தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, இவர்கள் இருவரும் விலகுவதாக அறிவித்தாலும், இவர்களின் பெயர் வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கப்படமாட்டாது என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் முடியும்வரை இவர்கள் தேர்தலில் போட்டியிடுபவர்களாகவே கருதப்படுவர். (ச)

## அரசியல்துறையினருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ. மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கும், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றது.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் இடம்பெற்ற இச் சந்திப்பிற்கு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமை தாங்கினார்.


காலை 9.20 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை இடம் பெற்ற சந்திப்பின்போது தேர்தல் காலத்தில் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது யாழ் மாவட்டக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (ச)




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ் மக்களின் தன்மானம், சுயநிர்ணய உரிமை என்பவற்றிற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பிட...



கோப்பாய் வாழ் பொதுமக்கள்

க. சுரேஷ் பிரேமச்சந்திரன்



சுதந்திரமாக மக்கள் பேசிடும் சூழ்நிலை கோருவோம்!

பரந்துபட்ட மக்களின் ஜனநாயகம்! பன்மைத்துவம்! மனிதநேயம்! கொண்ட சுயநிர்ணய உரிமை கோருவோம்!

சமாதானம் பூத்த பூஞ்சோலையாக மாற அங்கீகாரமளித்து வீணைக்கு வாக்களியுங்கள்!



X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) (8504)

வரட்சி நிவாரணமாக

# 35 இலட்சம் ரூபாவை ஜப்பான் அரசு வழங்கியது

(கொழும்பு)

இலங்கையில் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு ஜப்பான அரசு 35 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இந்த நிதி உதவிகளை ஜப்பான் வழங்கியுள்ளது.

புத்தளம், அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் வாழும் 2400 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை இதன்மூலம் வழங்கப்போவதாக ஜப்பான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகக்குறைந்த வருமானம் உடையவர்களைத் தெரிவுசெய்து இந்த நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (உ-2)

# மட்டக்களப்பில் நேற்று மனித சங்கிலிப் போராட்டம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்தி விசேட சலுகைகளை வழங்குமாறு கோரி நேற்றுக் காலை 2மணிநேரம் மனிதச் சங்கிலிப் போராட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது.

மட்டககளப்பு, திருகோணமலை நெடுஞ்சாலையில் வீதியின் இருமருங்கிலும் ஒன்று சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்தும் சுலோகங்களை ஏந்தியவாறும் மனித சங்கிலி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட மாணவர் அமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது. இந்த மாவட்டம் கல்வியில் முன்னேறிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல்கலைக் கழகம் மற்றும் தேசிய கல்விக் கல்லூரிகளுக்கான அனுமதியின் போது விசேட சலுகைகள் மறுக்கப்பட்டு வருகின்றமையை ஆட்சேபித்தே மட்டக்களப்பு மாவட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த மனித சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. (உ-2)

யாழ். மாவட்டத்தில்

# தபால்மூல வாக்களிப்பிற்கு 4482பேர் விண்ணப்பிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 4ஆயிரத்து 482 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறறுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெவித்துள்ளது.

இவற்றைப் பரிசீலனை செய்யும்போது சில விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம் எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கடந்த 1-ம் திகதியுடன் முடிவடைந்திருந்தது.

இதேவேளை, அஞ்சல் வாக்களிப்பை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ச-19)





தொண்டமனாறு கடல்நீரேரியில் மீன்பிடித்தொழில் செய்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்தமை தொடர்பாக நேற்று கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கண்காணிப்பு குழுவினரின் பிரதிநிதியையும், கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- ஜி.சாந்தன்)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.1.30 மணிக்கு கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முன்னாள் ஆசிரியர் சொ.பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ந)

❄ ❄ ❄

(வடலியடைப்பு)

மாதகல் சென். ஜோசப் மகாவித தியாலயமும் மாதகல் நுணசை வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சென்ஜோசப் மகாவித்தியாலய அதிபர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோடடக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ச-21)

## ஆசிரியர் இல்லை

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை, கோப்பாய் தெற்கு றோ.க. த.க. பாடசாலை, கோப்பாய் வடக்கு றோ.க. த.க. பாடசாலை ஆகியவற்றில் கிறிஸ்தவ சமயம் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லை என மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (உ-79)

## பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.செல்வரதன் தெரிவித துள்ளார். இப்பொதுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டில் யு.என்.எச்.சி. ஆரினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் இன்று பி.ப.2.00 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அரசாங்க அதிபர் செ.பத்மநாதன தலைமையில் இடம்பெறவுள்ள இநதக் கூட்டத்தில் யு.என்.எச்.சி.ஆரின் யாழ். வெளிக்கள நிலையத்தலைமை உத்தியோகத்தர் கே.மொறாட்டா கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் பிரதேச செயலர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-19)

ஐ.ம.சு. முன்னணிக்குள் குத்துவெட்டு



# சிறுவர் பாதுகாப்புக் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கோட்ட பாடசாலைகள் மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தல் மற்றும் சுகாதாரக் கழகங்களை மறுசீரமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசலை மட்டத்திலான சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை மறுசீரமைத்தல், சிறுவர்களது பிரச்சினைகளைக் கையாளுதல், சிறுவர் உரிமைகள், கடமைகள் தொடர்பாக யாழ். செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் இதில் ஆராயப்படவுள்ளன. (உ-79)


வட. இலங்கைச் சங்கீதசபையினர் நடாத்தும் சற்குருஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் 157ஆவது ஆராதனை விழாவும் தமிழிசை விழாவும் - 2004

இடம்:- யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக் கலையரங்கு

காலம்:- (I) 13. 03. 2004 சனிக்கிழமை சற்குரு தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா காலை 8. 30 மணி தொடக்கம் பி. ப. 3. 00 மணி வரை நடைபெறும்.
(II) 14. 03. 2004 ஞாயிற்றுக்கிழமை தமிழிசை விழா காலை 8. 30 மணி தொடக்கம் பி. ப. 4. 00 மணிவரை நடைபெறும்.

மேற்படி சபை அங்கத்தவர்கள், சங்கீத ஆர்வலர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- 6, 7 மார்ச் 2004ல் நடைபெற இருந்த மேற்படி விழாவே மேலேயுள்ள திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

திரு.ப.விக்னேஸ்வரன்
யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரும்,
வட.இ.ச.சபைத் தலைவரும்.

திரு.அ.தற்பரானந்தன்,
செயலாளர்,
வட.இ.ச.சபை.

(C/7454)



மாநகரசபை - யாழ்ப்பாணம்

கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம்-9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி: 18. 03. 2004ம் திகதி பி. ப. 15. 00 மணி
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19. 03. 2004ம் திகதி பி. ப. 13. 00 மணி
கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி: 19. 03. 2004ம் திகதி பி. ப. 14. 00 மணி

கேள்விப் பத்திரங்கள் யாவும் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட வேண்டும்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|
| 1. நவீன சந்தையில் 2 மலகூடங்களிற்கு மாபிள் பதித்து வர்ணம் பூசும் வேலை | 2000/- | 240/- |
| 2. சுப்பிரமணியம் பூங்காவில் இருக்கைகளும் (Benches) வீதிகளின் விளிம்பு சுவரும் (Kerb Wall) அமைக்கும் வேலை. | 7000/- | 600/- |

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
01.03.2004

(C/7373)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# ஜே.வி.பியின் ஆரம்பமும் ஜனநாயகத்திற்கான இரத்தம் தோய்ந்த அதன் வரலாறும்

**சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஷெலானி பெரேரா ஜே.வி.பி. இயகத்தைப் பற்றி எழுதிய சிறப்பு ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதியின் தமிழாக்கத்தை எமது வாசகர்களின் பயன்கருதி இங்கே வெளியிடுகின்றோம்.**

'ஜனதா விமுக்திப் பெரமுன்' இதுதான் இன்று எல்லோரது வாய்களிலும் உச்சரிக்கப்படுகின்ற ஜே.வி.பி. என்பதன் முழுச் சொல்



ரில்வின் சில்வா

வடிவம்.1965ஆம் ஆண்டு றோகண விஜய வீரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கட்சி இரண்டு பாரிய இரத்தக் களரிகளுக்குக் காரணயாக இருந்திருக்கிறது. இன்று இந்நாட்டின் ஜனநாயக அரசியலில் முக்கிய பங்காளியாகப் பரிணமித்திருக்கின்றது. அதுவும் இந்நாட்டின் இரண்டு தீய சக்திகளுள் ஒன்று என இக் கட்சியால் வர்ணிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு கூட்டுச்சேர்ந்து ஆட்சியைப் பிடிக்கக் காத்திருக்கின்றது.

பொதுவாகத் தென்னிலங்கையன் மிகப் பலவீனமான பொருளாதார மட்டத்தில் வாழ்கின்றவர்களால் கவரப்பட்டுள்ள இக்கட்சியின் வரலாற்றைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

கொம்யூனிஸ்ட் கட்சியின் (சீன்சார்பு) முன்னாள் தலைவரான சண்முகநாதனுடன் கொள்கை முரண்பாடுகள் கொண்டிருந்த அக்கட்சியின் இளைஞர் முன்னணியின் முக்கியஸ்தரான ரோகண விஜய வீர ஜே.வி.பியை 1965இல் ஆரம்பித்து, 1988-1990 காலப்பகுதியில் காலஞ்சென்ற ஜனாதிபதி ரணதுங்க பிரேமதாஸவின் ஆட்சியின்போது மர்மமான முறையில் கைதுசெய்யப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார். இக்காலத்தில்தான் ஜே.வி.பியினர் தமது இரண்டாவது இரத்தப் புரட்சியின் சிகரத்தில் இருந்தார்கள் என்று சொல்லவேண்டும்.

## ஜே.வி.பியின் நோக்கம்

ஆரம்பத்தில், லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய இடதுசாரிக் கட்சிகளால் வழிநடத்தப்பட்டு வந்த இடதுசாரி இயக்கத்திற்குத் தாமே தலைமைவகிக்கவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடனும் நாட்டின் ஆட்சியைப் புரட்சி மூலம கைப்பற்றுவது என்ற கொள்னையின் அடிப்படையிலும் ஜே.வி.பியினர் துரித கதியில் செயற்பட்டு வந்தனர்.

அக்காலகட்டத்தில் இடதுசாரி இயக்கத்தில் முக்கியமானவர்களாகப் பிலிப் குணவர்த்தன (ம.ஐ.மு), கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க, (க.க.மொஸ்கோ), கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா (ல.ச.ச.க.) பீற்றர் கெனமன (க.க. மொஸ்கோ) ஆகியோர் திகழ்ந்தனர்.

## இடதுசாரிகளின் காட்டிக்கொடுப்பு

1964ஆம் ஆண்டு யூலை 22ஆம் திகதி லங்கா சமசமாஜக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசமைத்தது. ஒரு வருடத்தின் பிற்பாடு மக்கள் ஐக்கிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது.

இநதப் பின்னணியில்தான் ஜே.வி.பி. இய்க்கம் ஆரம்பிக்கப்பட்டது. றோகண விஜேவீர இந்தச் செயலைக் கடுமையாகச் சாடினார். இடதுசாரிகளை முழுமையாகக் காட்டிக்கொடுத்த செயலாக இதனை வர்ணித்தார். இதே வேளையில்தான் உலக இடதுசாரி இயக்கமும் சோவியத் சார்பாகவும், சீனா சார்பாகவும் உடைந்து சிதறிப்போனது.

இவ்வேளை, கம்யூனிஸ்ட் கட்சியின் சீனச்சார்புக் கட்சியில் ஈடுபாடு வைத்திருந்த றோகண விஜேவீரவுக்கு ரஷ்யாவில் தனது மருத்துவப் படிப்பைத் தொடரமுடியாதபடி இலங்கையில் ரஷ்யத் தூதரகம் மீள்வீசா வழங்க மறுத்துவிட்டது.



ஜே.ஆர்.ஜெயவர்தன

மேலதிக விபரங்களுக்கு 25.02.2004 வலம்புரியின் 8ஆம் பக்கத்தைப் பார்க்கலாம்.

அதனால் கம்யூனிஸக் கட்சியின் இருபிரிவிலும் உள்ள இளைஞர் அமைப்புக்களையும் றோகண விஜேவீர கவர்ந்தெடுத்துத் தனது ஜனதா விமுக்திப் பெரமுனவை ஆரம்பித்தார்.

## முதல் பரீட்சை

1970ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலே ஜே.வி.பியினருக்கான முதலாவது அரசியல் பரீட்சிப்புக் களம் என்று சொல்லலாம். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினால் வழிநடத்தப்பட்ட ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்குமாறு றோகண விஜேவீர தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மே 27ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தலுக்குச் சில தினங்கள் முன்பாக விஜேவீரவின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட இருவர் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விஜேவீரவும் கைதுசெய்யப்பட்டார். பின்னர் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த 2 மாதங்க்ளில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## கைதும் புரட்சியும்

ஐக்கிய முன்னணி அரசின் கொள்கைகள் அது ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே றோகண விஜேவீரவின் வெளிப்படையான கண்டனங்களுக்கு இலக்கானது மட்டுமல்லாது தேர்தல் வாக்குறுதிகளை அவ்வரசு நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்கும் அது இலக்கானது. அதன் கார



றோகண விஜேவீர

ணமாகச் ஸ்ரீமாவோவின் அரசாங்கம் விஜேவீரவைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது. இவ்வேளையில் அரசாங்கத்தைப் புரட்சி மூலம் தூக்கியெறிவதற்கு ஜே.வி.பியினர் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நாடுமுழுவதிலும உள்ள 74 பொலிஸ் நிலையங்களை ஜே.வி.பியினர் தாக்கினர். இதுவே சுதந்திர இலங்கையின் முதலாவது ஆயுதப் புரட்சியாகக் கணிக்கப்படுகின்றது.

இதன்போது பிரதமரைச் சிறைப்பிடித்துப் பணயக் கைதியாக வைத்திருப்பதும் ஒரு திட்டமாக இருந்தது. அதன்மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற கனவும் தவிடுபொடியானது. தற்போதைய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட குழுவில் இடம்பெற்றிருந்தார். பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டு சிறையிலும் அடைக்கப்பட்டார்.

## ஜே.வி.பிக்குத் தடை

1972 மே 16ஆம் திகதி ஜே.வி.பி. இயக்கம் தடைசெய்யப்பட்டுச் சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் குற்ற நீதி விசாரணை ஆணைக்குழுவினால் ஆயுட்கால கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

மிக நீண்ட 8வருடங்களைச் சிறையில் கழித்த றோகண விஜேவீர 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கியதேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்டார். ஜே.வி.பியின் கோட்டையாகக் கருதப்படும் ஹங்குரங் கொத்தவில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தான் ஆட்சிக்குவந்ததால் றோகண விஜயவீரவை விடுதலை செய்வதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்னதாகவே வாக்குறுதி அளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் ஜே.வி.பி. ஆதரவாளர்களின் வாக்குகளைக் கவர்ந்தெடுத்து ஸ்ரீமாவோவை ஆட்சியிலிருந்து வீழ்த்தவும், ஜே.வி.பியை ஜனநாயக நீரோட்டத்தில் சேர்க்கும் இராஜ தந்திர முயற்சியாகவுமே ஜே.ஆர்.இதனை மேற்கொண்டார்.

## தேர்தலில் விஜேவீர

1982ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் றோகண விஜேவீர போட்டியிட்டார். அதன் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன 3,450, 811 (52.91%), ஹெக்டர் கொப்பேக்கடுவ 2, 548, 438 (39.07%), றோகண விஜேவீர 273, 428 (4.19%), குமார் பொன்னம்பலம் 173, 934 (2.67%)

இந்த முடிவுகள் மூலம் ஜனதா விமுக்திப் பெரமுன, இலங்கையின் முக்கிய இடதுசாரிக் கட்சியும், இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாக 1935இல் பதியப்பட்டதுமான லங்கா சமசமாஜக் கட்சியைப் பின்தள்ளி பிரதான இடதுசாரிக்கட்சியாகப் பரிணமிக்கத் தொடங்கியது.

## ஜே.வி.பிக்கு ஏமாற்றம்

இந்த முடிவுகளை அடுத்து அடுத்த வருடத்தில் நடக்கவிருந்த பொதுத்தேர்தலில் ஜே.வி.பி குதிக்கத் திட்டமிட்டிருந்தது. ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் பாராளுமன்



சோமவன்ச அமரசிங்க

றத்தின் ஆயுளை நீடித்துக் கொண்டார்.

இது ஜே.வி.பியினருக்குப் பெருதத ஏமாற்றத்தைக் கொடுத்தாலும், அவர்கள் கட்சியைப் புனரமைப்பதிலும், அங்கத்தவர்களை அதிகரிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டு கவர்ச்சிகரமான மேதின ஊர்வலங்கள்மூலம் கட்சியின் பலத்தை வெளிக்காட்டத் தொடங்கினார்கள். ஆனால், 1983இல் இடம் பெயர்ந்த இனக்கலவரத்தில் தமிழருக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜே.ஆர். அரசாங்கம் ஜே.வி.பித் தலைவர்களை உண்மைக்குப் புறம்பான விதத்தில் கைதுசெய்ய உத்தரவிட்டது.

## தடையும் தலைமறைவும்

ஜே.வி.பி. உட்பட மேலும் இரண்டு இடதுசாரிக் கட்சிகளுக்கு ஜே.ஆர்.அரசு தடைவிதித்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987இல் மேற்கொள்ளப்படும்வரை சுமார் ஆறுவருடங்கள் றோகண விஜேவீரவும் அவரது சகபாடிகளும் தலைமறைவுச் சீவியமே நடத்தி வந்தனர். இலங்கை இந்திய ஒப்பந்தம் பொதுமக்களின் எழுச்சியை ஏற்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்குக் கிடைத்த வாய்ப்பாக ஜே.வி.பி பயன்படுத்தியது.

## கைதும் மரணமும்

இந்தக் காலகட்டம் இலங்கை வரலாற்றில் மிகவும் கொடூரமும் பயங்கரங்களும்



விமல் வீரவன்ச

நிறைந்த காலகட்டமாகக் கணிக்கப்படுகின்றது. இப் பயங்கரங்கள் யாவும் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி கண்டியில் உலப்பனை என்ற இடத்தில் வைத்து ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜயவீர கைது செய்யப்பட்டதோடு முடிவுக்கு வந்தது.

மேல விசாரணைகளுக்காக அவர் இராணுவத்தினரால் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார். அவர் தொலைக்காட்சி மூலம் தமது போராளிகளிடம் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டார். இப்பேட்டி இராணுவத்தினரால் ஒளிப்பதிவு செய்யப்பட்டதாகும். இராணுவப் பாதுகாப்பில் இருந்து தப்பிக்க முயற்சி செய்கையில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பொழுதிலும், அவர் இராணுவத்தால் கொலைசெய்யப்பட்டதாகவே குற்றம்சாட்டப்படுகின்றது. அடுத்தநாள் ஜே.வி.பியின் உபதலைவர் உபதிஸ்ஸகமநாயக்காவும் கைதுசெய்யப்பட்டார். அவருக்கும் இக் கதியே நிகழ்ந்தது. சுமார் 40 ஆயிரம் மக்களைப் பலி கொண்ட ஜே.வி.பியின் இரண்டாவது புரட்சியும் அத்தோடு முடிவுற்றது.

## எஞ்சியவர் சோமவன்சவே

ஜே.வி.பியின் அரசியல் பீடத்தில் எஞ்சியவர் சோமவன்ச அமரசிங்க மாத்திரமே. இந்தியாவூடாக அவர் ஐரோப்பாவிற்குத் தப்பிச் சென்றார்.

1990ல் ஜே.வி.பி. மீதான தடையைப் பிரேமதாச அரசு நீக்கியது. 1995இல் தங்காலையில் கூடி ஜே.வி.பி. புதிய அரசின் குழுவைத தெரிந்தது. அப்பொழுது இதற்குப் பாராளுமன்றில் ஒரு

**தமிழாக்கம்**
**பேதுரு யேசுதாசன்**

ஆசனம் மட்டுமே இருந்தது. 2000ஆம் ஆண்டில் 10 ஆசனங்களையும் அதன்பின் சந்திரிகாவின் அரசு தள்ளாடியபோது ஒரு கூட்டரசாய் தன்னையும் ஜே.வி.பி. அமைத்தது. அது குறுகிய காலத்தில் முடிவுற்று 2001இல் ஜே.வி.பியினர் தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்றனர்.

இப்பொழுது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் முக்கிய அமைச்சுக்களைக் கோரி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்கின்றது ஜே.வி.பி. □

## இன்று ஒரு தகவல்

# நிரந்தர எதிரிகள்

ஒரு நண்பன் எதிரியாக மாறுவது சகஜம். எதிரி நண்பனாக மாறுவதும் சகஜம். நேற்றுவரை நன்கு பேசிக் கொண்டிருந்தவன் இன்று திடீரென்று பேச்சை நிறுத்திக் கொள்வான். இன்றுவரை விரோதியாக இருந்தவன் நாளைக்குத் திடீரென்று வந்து ஒட்டிக் கொள்வான். நண்பனாகி விடுவான்.

இது சகஜமான ஒரு விடயம். இப்படி இருக்கும்போது நிரந்தரமான எதிரி என்று யாராவது நமக்கு உண்டா? என்று கேட்டால் உண்டு என்று கூறுகின்றனர் பெரியவர்கள்.

நிரந்தர எதிரி என்பதைத் தான் “நித்ய சத்ரு” என்கின்றனர். அந்த நித்ய சத்ரு யாரென்று கேட்டால் அது ஆசை என்று கூறுகின்றனர். ஆசைகள் இருக்கவேண்டியதுதான். ஆனால் அதெல்லாம் ஒரு கட்டுக்குள்ளே இருக்க வேண்டும். ஆசை அளவுக்கு மீறிப் போகும்போது மனிதனும் பாதை மாறிப் போகவேண்டி ஏற்படுகிறது. தப்பான ஆசை துராசை. அளவுக்கு மீறிய ஆசை பேராசை. இது மனிதனை கீழே இறக்கிவிட்டுவிடும்.

நாம் சாதாரணமாக எதையெல்லாம் துக்கம், வருத்தம் என்று நினைக்கிறோமோ அதெல்லாம் அப்படி யில்லை என்கின்றனர். மனிதனுடைய துக்கத்திற்குக் காரணம் என்ன? ஆசை நிறைவேறாததனால் எழுந்த வேதனையா? முயற்சி செய்த காரியம் முடியாமல் போய் விட்டதே என்கின்ற வருத்தமா? தேர்வில் வெற்றி பெறாத தனால் ஏற்படும் சோகமா? பணம் சேர்க்க முடியவில்லை. பங்களா வாங்க முடியவில்லை என உண்டான இயலாமை கலந்த துக்கமா? இதெல்லாம் தான் துக்கங்கள், வருத் தங்கள் என்று நாம் நினைக்கிறோம். இதெல்லாம் துக்கம் இல்லையாம். தேகாபிமானம் தான் துக்கமாம்.

உடம்போடு தன்னை இணைத்துப் பார்க்கும் அறியாமை தான் துக்கம். நான், எனது இந்த இரண்டு வார்த்தை தான் துக்கத்துக்குக் காரணம். ஒன்று அகங்காரம் மற்றது மகோரம்.ஆசைகள் மனிதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். ஆனால் அதுவேதான் மனிதனை துக்கத்தில் ஆழ்த்துகின்றது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் மனதைக் கட்டுப்படுத்தவேண்டும். இது என்ன அவ்வளவு சுலபமான காரியமா என்று நீங்கள் கேட்கலாம்.

ஒரு ரயில் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஒருலட்சம் பேர் எதிர்த்து நின்றாலும் அதை நிறுத்த முடியாது. ஆனால் அந்த எஞ்சினினுள்ளே இருக்கின்ற ஒரு கருவியை இயக்கினால் பிரேக் போட்டு விட முடியும. லட்சக் கணக்கானவர்கள் சாதிக்க முடியாததை ஒரு சிறுபிரேக் சாதித்து விடுகிறது. இது போல் தான் மனமும். மனதுக்கு பிரேக் போட்டால் எல்லாத் துன்பமும் காணாமல் போய் விடும்.

சூரியனது ஒளியை மேகம் மறைத்து விடுகிறது. இருளை உண்டாக்கி விடுகிறது. ஆனால் காற்று வீசும்போது மேகம் விலகிப் போய் மீண்டும் சூரியன் பிரகாசிக்கிறது. அதேபோல தான் மனிதனின் உள்ளே சுயப்பிரகாசமாக ஒளிவீசும் ஆத்ம தத்துவதை ஆசை என்னும் மேகம் சூழ்ந்து கொண்டு திரை போட்டு மறைக்கிறது. அன்பு என்ற காற்று வீசும் போது அகங்கார மமகார மேகங்கள் விலகிப் போய் விடுகிறது. ஆத்ம தத்துவத்தின் வெளிச்சம் புலப்படுகிறது.

அதனால் நான், எனது என்ற எண்ணங்களைக் கட்டுப் படுத்தி வைக்கவேண்டும் என்பது பெரியோரின் அறிவுரை. இது எந்த அளவுக்கு நமக்கெல்லாம் சாத்தியமாகும் என்று நமக்குத் தெரியாது. இருந்தாலும் கூற வேண்டியதைக் கூறி வைப்போமே.

மனிதனின் ஆசைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் புரிநது கொள்வதற்காகக் கடவுள் ஒருமுறை இங்கே வந்தாராம். மூன்று மனிதர்களைப் பார்த்தார். “உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் தருகிறேன்” என்றார். முதல் ஆள் ஒரு துறவி. அவர் கேட்டார் “எனக்கு சொர்க்கம் வேண்டும்” என்றார். “சரி தருகிறேன்” என்றார். அடுத்த ஆள் ஒரு சம்சாரி. அவன் கேட்டான். “எனக்கு 10 லட்சம் ரூபா பணம் வேண்டும்” என்றான. “சரி தருகிறேன்” என்றார். அடுத்த ஆளைப்பார்த்து உனக்கு என்ன வேண்டும்? என்றார். “அவன் மெதுவாக அருகில் வந்து அந்த இரண்டாவது ஆளுக்கு 10 லட்சம் பணம் தருவதாகக் கூறினாயே அவனது வீட்டு விலாசத்தைக் கொடு” என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதான நடைமுறைகளில் ஐ.ம.சு.மு. முரண்படுகிறது

## பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமாதான நடைமுறையின் ஒரு சில விடயங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதாக ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

இதேவேளை, மக்கள் ஆணையைக் கோருவதற்கு முன் தமது கட்சி மேற்கொள்ளவுள்ள சமாதான முயற்சிகள் குறித்துத் தெளிவுபடுத்துமாறு பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அக்கட்சியிடம் கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி பீடமேறும பட்சத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை எவ்வாறு அமுல்படுத்தப்படும் என விளக்கவேண்டும்.

உடன்படிக்கையில் குறைபாடுகள் இருந்தாலும் அதன் பிரமாணங்களுக்கு உட்பட்டு நடக்கப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறியுள்ளது.

ஆனால், உடன்படிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி கூறுகின்றது.

இதற்கமைய யுத்த நிறுத்த உடன்படிக்கை திருத்தப்படுமா? இல்லையா என்பதை மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன், நாட்டின் நிர்வாக முறையிலும் இதே போன்ற முரண்பாடுகள் காணப்படுகின்றன. கூட்டணி



சமஷ்டி ஆட்சி முறையை விரும்புகிறதா என்பதும் தெளிவுபடுத்தப் பட வேண்டும்.

இத்தகைய பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி பீடமேறினால் சமாதான முயற்சிகள் படுகுழியில் தள்ளப்படும்.

சமாதான முயறசிகளை முன்னெடுத்துச் செல்வது, தேர்தல் முறையை மாற்றி அமைப்பது, மீட்சியுடைய பொருளாதார முறையை அமுல்படுத்துவது ,நிறைவேற்று அதிகாரமுறையை நீக்குவது போன்ற 4 விடயங்களுக்காக மக்கள் ஆணையைக் கோருவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனால், அவரது ஒரே நோக்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவதே. அவரது இரண்டாவது பதவிக்காலம் முடிவுறுவதால் ஜனாதிபதி இந்த முறையை மாற்ற முனைகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

(உ-60,8)

# வன்செயல்களைத் தடுப்பது குறித்து தேசிய ஆலோசனைச் சபை யோசனை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் தினத்தன்றும் அதற்குப் பின்னரும் இடம்பெறக்கூடிய வன் செயல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வன் செயல் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடன் கூடி ஆராய தேசிய ஆலோசனைச் சபை தீர்மானி[த்]துள்ளது.

இதற்கமைய, இம்முறை போட்டியிடும் 24 அரசியல் கட்சிகளினதும் தலைவர்களுடன் உள் விவகார பாதுகாப்பு அமைச்சர் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்த தேசிய ஆலோசனைச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சபையின் அழைப்பாளராக கடமையாற்றும் உள் விவகார பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எம்.என். யுனைட் அனைத்துக் கட்சிகளுக்கான அழைப்பை விடுத்துள்ளார். (உ-2)

## இராசி பலன்

**03. 03. 2004**

**(மாசி 20, புதன்கிழமை)**

| | |
|---|---|
| துவாதசி பின்னிரவு | 5.24 வரை |
| புனர் பூசம் முற்பகல் | 9.07 மணி வரை |
| இராகுகாலம் | 12.26- 1.56மணிவரை |
| சுபநேரம் | 4.56-6.26 மணிவரை |

**மேடம்**
கல்வியில் ஆர்வம், உடல் நலக்குறைவு, ரோக பயம், சிந்தனை மிகுதி.

**இடபம்**
புதிய முயற்சி, பிரயாண நன்மை, உறவினர் வழி நன்மை, தனவரவு.

**மிதுனம்**
காரிய விவாதம், உணர்ச்சி வசப்படுதல், பொருள் விரயம், தொழில் கஷ்டம்.

**கடகம்**
சயன சுகம், ஜனவசியம், விருந்துபசாரம், எடுத்தகருமங்கள் கைகூடும்.

**சிங்கம்**
அமைதிக்குறைவு, பிரயாணம், தொழிலில் ஆர்வம், தனவிரயம்.

**கன்னி**
குடும்ப மகிழ்ச்சி, தொழில் வருமானம், பெருமையடைதல், முயற்சி கைகூடும்.

**துலாம்**
கடுமையான பிரயாசை, தூரதேசச் செய்தி, எடுத்த கருமங்கள் கைகூடும், கலந்துரையாடல்.

**விருச்சிகம்**
தொழில் நிலை மாற்றம், சரீரப்பிரயாசை, பித்த ரோகம், அபகீர்த்தி.

**தனுசு**
திருடர் பயம், காரியதடங்கல், உடல் வியாதி, கௌரவக்குறைவு.

**மகரம்**
களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரிய அனுகூலம், தொழில் விருத்தி.

**கும்பம்**
தேக நலன், சகோதரர் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், உற்சாகம்.

**மீனம்**
வியாபாரநன்மை, தாழ்ந்த சுபாவம், கடுமையான வார்த்தை, பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# புலிகளின் மூத்த உறுப்பினர் இன்று வவு. இல் முக்கிய உரை

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

சமகால அரசியல் நிலைப்பாடு, தற்போதைய தேர்தல் நிலைவரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக இவர்அங்கு கலந்துரையாடி விசேட உரையும் ஆற்றவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் கா.வே. பாலகுமாரன் வவுனியாவுக்குச் செல்வது இதுவே முதறதடவை என்பது குறிப்பிடத்தக்கது. ([illegible]

# நலன்புரி நிலையத்தை தீயிட முனைந்த இருவர் கைது

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் மற்றொரு பகுதியில் குடியிருப்புக்களுக்குத் தீ வைக்க முற்பட்டமை தொடர்பாக இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பூந்தோட்டம் 2ஆம், 3ஆம் யூனிற் பகுதிகளில் நேற்று முன்தினம இரவு தமது நலன்புரி நிலையங்களுக்குத் தீவைக்க முற்பட்ட நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதன் தொடர்ச்சியாக அச்சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் மற்றொரு நபர் நேற்றுக்காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த ஞாயிறன்று பூந்தோட்டம் 6ஆம் யூனிற் பகுதியில் நலன்புரி நிலையம் ஒன்று எரிந்து அழிந்ததில் நூற்றிற்கும் அதிகமான குடிசைகள் முற்றாக அழிந்தன. இத்ன் காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பல்வேறு அ[illegible]ப்புக்களும் பல்வேறுவிதமான உதவிகளையும் வழங்கிவருகின்றன. பல்வேறுவிதமான நெருக்கடிகளில் வாழ்ந்துவரும் 2ஆம், 3ஆம் யூனிற் மக்கள் தமக்கும் இவ்வாறான உதவிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டிருக்கலாம் என்றும் தேர்தல் நெருங்குவதால் மக்களுக்குப் பின்புலத்தில் அரசியல் சக்தியொன்று இருந்து செயற்படலாம் என்றும் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

# ஆடு, மாடு பலி தடை சட்டத்தை அமுல்படுத்துக: நீதிபதி கற்பகவிநாயகம் கோரிக்கை

(சென்னை)

கோவில்களில் ஆடு,மாடுகள் பலியிடுவதற்கு மீண்டும் தடை விதிக்கவேண்டும். தடைச் சட் டமரத்து என்ற அரசின் முடிவை மறு பரிசீலனை செய்யவேண்டும் என சென்னை உயர் நீதிமனற நீதிபதி எம்.கற்பகவிநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிபதி என்ற நிலையில் நான் இதைச் சொல்லவில்லை. பிற உயிர்களை நேசிக்கும் சாதாரண மனிதன் என்ற வகையில் கோரிக்கை விடுக்கிறேன் என்றார் அவர்.


சி.பி. ராமசாமி அய்யர் அறக் கட்டளை சார்பில் சென்னையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலாஷேத்ரா நிறுவுநர் ருக்மிணி அருண்டேலின் நூற றாண்டு நிறைவு விழாவில் அவர் பேசிய போது இவ்வாறு கூறினார்.

ஆடு,மாடு பலி தடைச் சட் டத்தை மீண்டும் அமுல்படுத்துமாறு பிராணிகள் நலச் சங்கங்கள் அரசிடம் கோரிக்கை வைக்கலாம்.கோவில்களைக் கசாப்புக் கடைகளாக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

வள்ளுவர், வள்ளலார், பாரதியார் பிறந்த இந்த மண்ணில் உயர்கள் பலியிடப்படுவதை அனுமதிக்கக் கூடாது. ஆடு, மாடுகளைப் பலியிடும் மூட நம்பிக்கையைப் போக்க மக்களிடையே விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ள வேண்டும். பிராணிகளைப் பலியிடுவதற்குப் பதிலாக ஆணவம், அகங்காரம், மமதை போன்ற தீய குணங்களைப் பலியிடவேண்டும்.

கால்நடைகள் மற்றும் விலங்குகள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுக்க முதன் முதலில் குரல் கொடுத்தவர் ருக்மிணிதேவி அருண்டேல். அவரது முயற்சியால்தான் மிருகவதைத் தடைச் சட்டம் 1960 இல் நிறைவேற்றப்பட்டது.

அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டினார் அவர். கலாஷேத்திராவை உருவாக்கி கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்கந்தார். பரதநாட்டியத்துக்கு சமூக அந்தஸ்து பெற்றுத்தந்தவர் அவர். மனிதாபிமானியாக வாழ்ந்து பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துவதே நாம் அவருக்குச் செய்யும் மரியாதை என்றார் நீதிபதி கற்பக விநாயகம். (து)




வரும் மக்களவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை அக் கட்சியின் தலைவர் மு. கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டார். இதில் கலைக் கப்பட்ட 13வது மக்களவையில் உறுப்பினர்களாக இருந்த 10 பேரில 3 பேருக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு மறுக்கப் பட்டுள்ளது.

## ஜெயலலிதாவின் தேர்தல் பிரசாரம்

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டதை யடுத்து, அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தை வரும் 9 ஆம் திகதி தொடங்குகின்றார்.

சென்னை தேனாம்பேட்டை யில தமது தொடக்கப் பிரசாரத்தை ஆரம்பிக்கும் ஜெயலலிதா தமிழகத்திலும் புதுவையிலும் பல இடங்களில் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளார்.

மே மாதம் 8 ஆம் திகதி மத்திய சென்னை, தென் சென்னை தொகுதிகளில் பிரசாரம செய்வதோடு தேர்தல் பிரசாரத்தை அவர் முடித்துக் கொள்வார். (து)

## தி.மு.க. வெளியேறியது ஏன் ?

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தான் தி.மு.க அங்கம் வகித்ததே தவிர பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி எதுவும் வைக்கவில்லை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திராவிடக் கொள்ளைகளுக்குப் பாதகமாக பா.ஜ.க சில முடிவுகளை மேற்கொண்டதால் தான தி.மு. க. தேசிய ஜன நாயகக் கூட்டயிணிலிருந்து வெளியேற நேரிட்டது என அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிததார். (து)

# கலிங்கப்பட்டியில் வைகோவுக்கு வரலாறு காணாத வரவேற்பு

(திருநெல்வேலி)

பொடாவில் கைதாகி 577 நாள் சிறைவாசத்தை முடித்த பின் முதல்முறையாக தான் பிறந்து வளர்ந்து தவழ்ந்த கலிங்கப் பட்டிக்கு கடந்த சனிக்கிழமை இரவு வந்தார் வைக்கோ.

கரிசல்பூமியான கலிங்கப்பட்டி கிராமத்தில் இதுவரை அப்படியொரு கூட்டம் கூடியிருக்காது. அந்தக் கூட்டம் சாதி, மதம், அரசியலைக் கடந்து வைகோ என்ற ஒரு தனிமனிதனை போற்றி வாழ்த்த வந்த கூட்டமாகவே இருந்தது.

வைக்கோவை வரவேற்கவும் அவரைப் பாராட்டவும் ஊர்ப் பொதுமக்கள் சார்பில் அச்சிறிய கிராமத்தில் பிரத்தியேகமாக 17 ஏக்கர் பரப்பில் மைதானம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு கூடிய கூட்டம் காவல்துறை கணக்கின் படி 23ஆயிரம். இதில் 3ஆயரம் பேர் பெண்கள்.

வைக்கோ சிறையில் இருந்து விடுதலையான கடந்த7ஆம் திகதி முதலே அவரை வரவேற்க கலிங்கப் பட்டி தயாராகி வந்தது. அவரைக் காண சுற்று வட்டாரக் கிராம மக்கள் மனதில் இருந்த ஆர்வம் கலிங்கப் பட்டியில் கூடிய அக்கூட்டத்தில் நிரம்பி வழிந்தது.

கூட்டத்தின் நடுவே வைக்கோவின் தாயார் மாரியம்மாளும் ஆர்வததுடன் அமர்ந்திருந்தார். வைக்கோவுடன் பொடாவில் கைதான 8 பேரும் அங்கு வந்திருந்தனர். எனினும கதாநாயகன் வைக்கோவைக் காண கலிங்கப்பட்டியைச் சுற்றியுள்ள 25க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வான், டிராக்டா, கார் மற்றும் இரு சக்கர வாகனங்களில் அங்கு கூடியிருந்தனா. அவ்வாறு அங்கு வந்திருந்த வாகனங்களில் 4 சக்கர வாகனங்கள் மட்டும் ஆயிரத்து 279, இரு சக்கர வாகனங்கள் 400 என்று காவல்துறை தெரிவித்தது. சிறையில் இருந்து வைக்கோ வெளியே வந்தபின் அவர் பேசிய 2வது பொதுக் கூட்டம் இது. கடந்த 19 ஆம் தகதி சென்னை அண்ணா நகரில் முதலாவது பொதுக் கூட்டத்தில் பேசினார். கலிங்கப்பட்டி கிராமத்தில் இத்தனை ஆயிரம் மக்களை வைகோ கூட எதிர் பாாத்திருக்க மட்டார். அதைப் போல அவரது பேச்சும் கட்சித் தொண்டர்களுக்கு எதிர்பாரததாகவே இருந்தது. (து)

# வேட்பாளர்களது சொத்து விபரங்கள் வெளியிடப்பட வேண்டும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

மக்களவைத் தேர்தல் அறிவிக் கப்பட்டதன் பின்னர் தோதல் நடவடிக்கையுடன் தொடர்புடைய அதிகாரிகளை மாற்றுவதறகுத் தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

தேர்தல் நடைமுறைகள் முடிவுக்கு வரும் வரை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்குவதை நாடாளுமன்ற உறுப்பினா்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியோர் நிறுத்தி வைக்க வேண்டும் மென்றும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு நியமன உறுப்பினர்களுக்கும் பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற் கிடையே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினது சொத்துக் கணக்கை தேர்தல் ஆணையம் கோரிப் பெற்று, அவற்றை வெளியிட வேண்டுமென்று டில்லி உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (து)

## காஷ்மீரில் தேர்தலைப் பகிஷ்கரிக்க கிளர்ச்சிக் குழு கோரிக்கை

காஷ்மீரின் முன்னணிக் கிளர்ச்சிக் குழுவொன்று தேசிய தேர்தலில் பங்கேற்கவேண்டாம் என்று வாக்காளர்களைக் கேட்டிருக்கிறது.

அந்த மாநிலத்தில் வன்முறைகள் தீவிரம் அடைந்து வரும் வேளையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தேர்தலில் ஆளும் கூட்டணியே மீண்டும் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிற பின்னணியில் வாக்களிப்பை பகிஷ்கரித்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டுமாறு ஹிஸ்புல் முஜாஹுதீன் அமைப்பின் தலைவர் கேட்டுள்ளார். (து)

# ஹெலிகொப்டரில் சென்று காரில் திரும்பிய அத்வானி

2004 தேர்தல் பிரசாரம் செய்ய துணைப பிரதமர் அத்வானி இந் திய விமானப்படை ஹெலிகொப்டரில் பெங்களூரில் சென்ற பிறகு தேர்தல் விதிமுறைகள் அமுலுக்கு வந்ததால் ஹெலிகொப்டர் இனறி, அங்கிருந்த காரில் திரும்பினார். தேர்தல் அறிவிப்பினால் அத்வானயின பிரசார திட்டம் பாதிக்கப்பட்டது.

தோதல பிரசாரத்திற்காக இந் திய விமானப்படை விமானத்தில் பெங்களூர் சென்ற அத்தவானி. அங்கிருந்து இராணுவ ஹெலி கொப்டரில் தும்கூர் சென்று. அங்கு பிரசாரம் மேற்கொண்டிருக்கும் போது, தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவிப்பினை வெளியிட்டது.மேலும் தேர்தல் நடைமுறைகள உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அறிவித் தது. இதனைத்தொடர்ந்து தேர்தல் விதிமுறைப்படி இராணுவ ஹெலி கொப்டரை தேர்தல் பிரசாரத் திற்கு பயன்படுத்தப்படக்கூடாது என்ற அடிப்படையில், ஹெலி கொப்டர் அங்கிருந்து கிளம்பி விட்டது. அதன் பின்னர் தனது பிரசாரத்தை முத்துக் கொண்ட அத்வானி, அங் கிருந்து, காரில் பெங ளூர் திரும்பினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அத்வானி, நான் பெங்ளூர் வரும்போது,ஹெலிகொப்டரில வந்தேன், இப்போது காரில் திருமபுகிறேன் என்றார்.

மேலும், "பெங்களூர்-தும்கூர் இடையேயான இந்த புதியசாலையில் பயணம் செய்தது மிகவும் நன்றாக இருந்தது. ஒரு வேளை நான் ஹெலி கொப்டரில் செனறிருந் தால் இந்த அனுபவத்தை தவறி விட்டிருப் பேன்" என்றும் அத்வானி கூறினார். (து)

# கேரள ஆளுநருக்கு தவறான சிகிச்சை: விசாரணைக்குழு அமைக்க அரசு முடிவு

சமபத்தில் காலமான கேரள மாநில ஆளுநா் சிக்கந்தர் பஹதக்கு அளிக்கப்பட்டசிகிச் சை குறித்து முழு விபரங்களையும் அறிந்து கொள்ள விசாரணைக் கமிஷன் அமைக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.

திருவனந்த புரத்தில் நடைவெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கேரள முதலமைச்சர் ஏ.கே. அந்தோனி அறிவித்துள்ளார்.

சிக்கந்தர் பஹத்க்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதாக புகார் கூறப்பட்டதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (து)

# பா.ம. க.வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் பட்டியல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே. மூர்த்தி செங்கல்பட்டிலும் ஏ.பொன்னுசாமி சிதம்பரம் (தனி) தொகுதியிலும் மீண்டும் போட்டியிடுகிறார்கள்.

அரக்கோணம் தொகுதியில் ஆா. வேணு, திண்டிவனம் தொகுதியில் தனபால், தர்மபுரியில் டாக்டர் ஆர். செந்தில், புதுவைத் தொகுதியில் பேராசிரியர் எம்.ராகவன் ஆகியோா் போட்டியிடுகிறாா்கள்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற கட்சியின் அவசர செயற்குழுக் கூட்டத்தின் பின் செய்தியாளர்களிடம் வேட்பாளர்கள் பட்டியலை டாக்டர் ராமதாஸ் வெளியிட்டார். (து)

# தி.மு.க. வேட்பாளர் பட்டியல் அறிவிப்பு!

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில்போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியின் தலைவர் மு. கருணாநிதியால் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது. இதில் கலைக்கப்பட்ட 13ஆவது மக்களவை உறுப்பினர்களாக இருந்த 10 பேரில் 3 பேருக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

மத்திய சென்னை மக்களவை உறுப்பினராகவும், மத்திய அமைச்சராகவும் இருந்து மறைநத முரசொலி மாறனின் மகன் தயாநிதி மாறன் மத்திய சென்னை வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

தென் சென்னையில் டி.ஆர்.பாலுவும், திருச்செந்தூர் தொகுதியில் வெங்கடேச பண்ணையாரின் மனைவி ராதிகா செல்வியும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். நாடார் இனத்தைச் சேர்ந்த வெங்கடேச பண்ணையார் சென்னையில் காவல்துறையினருடன் ஏற்பட்ட மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள 15 வேட்பாளர்களில் 5பேர் புது முகங்கள்.

இவர்களில் ஈ.ஜி.சுகவனம் கடந்த 1996இல் சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முதலமைச்சருமான ஜெயலலிதாவைத் தோற்கடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பேட்டியளிதத கருணாநிதி, இந்தத் தேர்வு தமக்குத் திருப்தி அளிப்பதாகக் கூறினார்.

சோனியா காந்தியுடன் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவீர்களா? என்று கேட்டபோது, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசார வியுகம் வகுக்கப்பட்ட பின்னர் அது பற்றி முடிவுசெய்யப்படும் என்று கருணாநிதி பதிலளித்தார். (து)

# பிரதிபண்ணுவோருக்குத் தடை சுயமாக இயங்க வேண்டுகோள்

## டேவிட் பெக்காமால் வந்தது வினை

காலபந்தாட்ட உலகின் சிறந்த வீரரும், இங்கிலாந்து காலபந்தாட்ட



டேவிட் பெக்காம்

அணித்தலைவருமான டேவிட் பெக்காம் போல முடிவெட்டு வைத்துக் கொள்ளக்கூடாது எனவும், தலையில் வர்ணச் சாயம் அடித்துக் கொள்ளக்கூடாது எனவும், ஒட்ட முடியை வெட்டிக் கொண்டுதான் பயிற்சிக்கு வரவேண்டும் எனவும் பல திடீர் உத்தரவுகளை போட்டுள்ளது சீன கால்பந்தாட்டச் சங்கம.

சீன கால்பந்தாட்ட இளம் வீரர்களுக்கு இதுதொடர்பில் எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சீன காலபந்தாட்ட சங்கத்தின் இயக்குநர் பெங்ஜியான் மிங் கூறுகையில்,

ஒவ்வொரு வீரரும் தத்தம் திறமைகளைத தாமாகவே வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுதவிர எந்தக் காரணத்தைக் கொண்டும் மற்றவர்களை அப்படியே பின்பற்றக்கூடாது. எனவேதான் இளம் வீரர்களை தலைமுடியை ஒட்ட வெட்டிகொண்டு தான் பயிற்சிக்கு வரவேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளோம்.

டேவிட் பெக்காம் இன்றைய காலத்தைப் பொறுத்தவரை கால் பந்தாட்ட உலகின் சுப்பர் ஸ்ரார் உலகெங்கிலும், குறிப்பாக ஆசியாவிலும் கோடிக்கணக்கான ரசிகர்கள் சிலருக்கு உண்டு.

இவரது முடிவெட்டு மிகவும் பிரபலமாகக் காணப்படுகிறது ஒவ்வொரு போட்டித் தொடரிலும் இவரது முடிவெட்டு வித்தியாசமாகவே காணப்படும். இவரது சிகை அலங்காரத்தை அனைவரும் எதிர்பார்ப்பதுண்டு. இது தவிர சிலரைப் போலவே பலரும் தங்களை மாற்றிக்கொள்வதுண்டு என்றார்.

இதேவேளை, இதுபோன்ற சிகை அலங்காரத்துடன் வலம்வந்த 17 வயதுக்குட்பட்டோருக்கான கால் பந்தாட்ட வீரர்களுக்கு சீன கால் பந்தாட்ட சங்கம் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(யே-121)

## டெஸ்ட் போட்டி சமநிலையில் தொடரைச் சிம்பாப்வே வென்றது

காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2வது டெஸட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

பங்களாதேஷ் பெற்ற 168 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய சிம்பாப்வே அணி 2விக்கெற் இழப்பிற்கு 210 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணி சார்பில் ஸ்ருவார்ட் கார்லஸ் 103 ஓட்டங்களை எடுத்தார். கடுமையான மழைகாரணமாக டெஸ்ட் போட்டி பாதிக்கப்பட்டிருந்தது. கடந்த சனிகழமை மாத்திரம் 37ஓவர்கள் வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் 3 நாட்கள் விளையாடக் கூடிய நிலை கூட இருக்கவில்லை. முதல் போட்டியில் வெற்றி பெற்ற சிமபாபவே அணி டெஸ்ட் தொடரைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது.

சிம்பாப்வே வீரர்கள் 2001, 2002ம் ஆண்டுகளில் பங்களாதேஷை தோற்கடித்தபின்னர் ஒரு சுற்றுத் தொடரில் வெற்றிபெறுவது இதுவே முதல் தடவையாகும். (யே-121)

## பாகிஸ்தானை வெல்ல இந்தியாவால் முடியாது

### -ரஷீட் லத்தீப்

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி பாகிஸ்தான் அணியை எளிதில் வெற்றிபெற முடியாது எனவும் இந்திய அணி வீரர்கள் முக்கியமான போட்டிகளில் ஜொலிப்பதில்லை எனவும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் ரஷீட் லத்தீப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக லத்தீப் கருத்துத் தெரிவிக்கும் போது,

இந்தத் தொடரில் இந்திய அணியே வெற்றிபெறும் என கிரிக்கெற் ரசிகர்கள் கூறிவருகின்றனர். இந்தக் கருத்தினை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் சமீபத்தில் இந்திய அணி விளையாடியுள்ள டெஸ்ட் போட்டிகளைப் பார்த்தாலே உங்களுக்குப் புரியும். எதிரணியின் 20 விக்கெற்றுக்களைத் தொடர்ந்து 2 டெஸ்ட் போட்டிகளில் இந்திய பந்துவீச்சாளர்களால் வீழ்த்த முடியவில்லை. இவர்கள் தொடர்ந்து பந்துவீசும் போது களைப்படைந்துவிடுகிறார்கள்.

மற்றும் இவர்கள் முக்கிய போடடிகளில் ஜொலிப்பதில்லை. இதற்கு எதிரணி குவிக்கும் ஓட்டங்களே காரணமாகும். அத்துடன் பாகிஸ்தான் அணியில் நட்சத்திர வீரர்கள் என்று யாரும் இல்லை. எல்லோருமே எங்கள் அணியில் சிறந்த வீரர்களாகக் காணப்படுகின்றனர். இதனால எல்லாப் போட்டிகளிலும் அணி வீரர்கள் ஒருங்கிணைந்து செயற்படுகின்றனர். அதனால் எளிதில் எந்த அணியுடனும நாம் வெற்றிபெற முடிகிறது.

எமது அணியின் பந்துவீச்சும் சமீப காலத்தில சிறப்பாக இருந்து வருகிறது. எனவே இந்தமுறை எமது அணி வீரர்கள் சிறப்பாக செயற்பட்டு கிண்ணத்தைக் கைப் பற்றுவார்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

(யே-121)

# விளையாட்டு

## பாகிஸ்தானுக்கான இந்திய ஒரு நாள் அணி விபரம்

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்யும் இந்திய கிரிக்கெற் அணி, 5ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இந்த 5 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றும் இந்திய அணியின் விபரம் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் அணியில் சுழற்பந்து வீச்சாளர்களான அணில் கும்ளே, ஹர்பஜன் சிங் மற்றும் வேகப் பந்து வீச்சாளரான அஜித் அகார்கர் ஆகியோர் காயம் காரணமாக இடம்பெறவில்லை.

இவ அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று வீரர்களும் இடம் பெற்றுள்ளனர்.

அணியின் விபரம் வருமாறு,

சௌரவ் கங்குலி (தலைவர்), சச்சின் டெண்டுல்கர், ராகுல் ட்ராவிட், லீ.வி.எஸ்.லக்ஷ்மன், வீரேந்தர் சேவாக், அஸிஸ் நெக்ரா, இர்பான் பதான், எஸ்.பாலாஜி, சஹீர்கான், முரளி கார்த்திக், முகமது கைவ், ஹேமன் பதானா, யுவராஜ்சிங், றொமேஸ் பவார்,பார்த்தீப் பட்டேல்.

இவ் அணியில் புதிய சுழல் பந்து வீச்சாளராக றொமேஸ் பவார் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன், டெஸ்ட் போட்டியில் பங்குபற்றும் இந்திய அணி 22ஆம் திகதி அறிவிக்கப்படும் என இந்திய கிரிக்கெற் வாரியக்குழு அறிவித்துள்ளது. (யே-121,68)

## ஆர்ஜென்டீனாவில் டெனிஸ் போட்டி



ஆர்ஜென்டீனாவில் நடைபெற்று வரும் பகிரங்க டெனிஸ் போட்டிகளில் அமெரிக்கர்களைப் பின் தளளி ஸ்பெயின் வீர, வீராங்கனைகள் முன்நிலையில் திகழ்கிறார்கள்.

(யே)

## தென்மாகாண ஹொக்கி போட்டி முடிவுகள்


தென்மாகாண ஹொக்கி சுற்றுப் போட்டியில் 15வயதிற்குக் கீழ்பட்டோருக்கான வெற்றிக்கிண்ணத்தைக் காலி மகிந்த வித்தியாலய அணியினர் சுவீகரித்துக் கொண்டுள்ளனர். இம் மாகாணத்தின் திறந்த பிரிவில் பெண்களுக்கான வெற்றிக்கிண்ணத்தை மாத்தறை புனித தோமஸ் விளையாட்டுக் கழகத்தினர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சென்ற வார இறுதியில் இரண்டு தினங்களாக நடைபெற்ற தென் மாகாண ஹொக்கி சுற்றப்போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலி சங்கமித்த பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

15 வயதிற்குட்பட்டவர்களுக்கான இறுதிப் போட்டியில் மாத்தறை புனித தோமஸ் கல்லூரி அணியினரை காலி மகிந்த வித்தியாலய அணியினர் வெற்றி கொண்டு சம்பியன்களாகத் தெரிவாகியிருநதனர். இதேவேளை, பெண்களுக்கான திறந்த பிரிவின் இறுதிப்போட்டியில காலி சவுத்லாண்ட விளையாட்டுக்கழகத்தினரை மாத்தறை புனித தோமஸ் விளையாட்டுக்கழகத்தினர் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தினைப் பெற்றெடுத்திருந்தனர்.

மேலும ஆண்களுக்கான திறந்த போட்டிப்பிரிவில் இறுதியாட்டம் காலி அலோசியஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கும், காலி மகிந்த வித்தியாலய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் காலி அலோசியஸ் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றிருந்தனர். இச் சுற்றுப்போட்டியில் 28கழக அணிகள் பங்குபற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (யே-68)

## உலக விளையாட்டு வலம்




சிக்காகோபுள்ஸ் அணியினரும் லேக்கர்ஸ் அணியினரும் மோதும் காட்சி



எஸ்பன்யோல் கழகத்தின் பிறெட்சனும் வலென்சியா அணியின் சிசோக்கோவும் ஐரோப்பிய ரக்பிக் கிண்ணத்திற்கான மோதலில்



விகன் அணியின் காத் ஹொக்கும் வைக்கிங் அணியின் வீரர் ஒருவரும் "பவகன்" வெற்றிக் கிண்ணத்திற்காக மோதும் காட்சி.



பின்லாந்தில் நடைபெறும் பனிச்சறுக்கல் போட்டியில் பெண் போட்டியாளர் ஒருவர் பங்குபெறும் காட்சி

# மாமனிதர் பட்டம் வென்ற மாண்புமிகு சிரித்திரன் சுந்தர்

## இன்று 8 வது நினைவு தினம்

திக்கவயல
**சி. தர்மகுலசிங்கம்**

உடலின் கதை சொல்வுதல் லக் கதை; உள்ளத்தின் கதை சொல்வதே உயர்ந்த கலை எனக்



கடந்த 50 ஆண்டு காலமாக கலை இலக்கியக் கருத்தாளராகவும் கார்ட்டூனிஸ்டாகவும் வாழ்ந்து வாசகர் நெஞ்சங்களில் இடம் பிடித்துக் கொண்ட சிந்தனையாளர் 'சிரித்திரன் சுந்தர்'

தமிழ்த் தேசிய இனத்தின் கலைப் பாரம்பரியம், கலாசாரம், ஒற்றுமை என்பன தளர்ந்து போன நிலையில் கார்ட்டூனிஸ்டாக மலர்ந்து நின்று தமிழன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு திசையாகச் சென்றால் வாழ்வில்லை என்பதைத் தனது கார்ட்டூனின் வலிமையால் கீறிக்காட்டி தமிழ் மககளைச் சிந்திக்கச் செய்த பெருமகன் இவர்.

தனது ஆரம்ப காலப் பட்டப் படிப்பினை கட்டடக் கலைஞராகத் தொடங்கிய இவர், பின்பு சமூக கலை இலக்கிய ஈடுபாட்டினால் கார்ட்டூனிஸ்டாக மாறினார்.

இந்தியாவின் பிரபல்யமான ஆங்கில நாளேடுகளான 'பிளிட்ஸ்' 'கொஞ்ச்'ஆகிய ஏடுகளில் கார்ட்டூனிஸ்டாக விளங்கிய இந்தத் தமிழ் மகன் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தால் கவரப்பட்டு நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் உருவத்தை ஓவியமாக வரைந்து கொடுத்தார். அந்த ஓவியம் பிற்காலத்தில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் மறைந்தபோது மக்களால் வீதி வழியே கொண்டுசெல்லப்பட்டது.

இலங்கையில் கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்களுக்கு முத்திரை வெளியிட்டபோது அதனை வரைந்து கொடுத்தவரும் சிரித்திரன் சுந்தரே!

தத்துவஞானி பேட்ரன் ரஸல் மறைந்தபோது அவரை அட்டைப் படமாக அலங்கரித்து அவரின் கீர்த்தியை தமிழுலகுக்கு வடித்துத் தந்த பெருமை சிரித்திரன் சுந்தரையே சாரும். பேரறிஞர் அண்ணா இறந்தபோது ஒரு கோட்டுச் சித்திரத்தால் அவரின் படத்தைக் கீறி அஞ்சலித்தமையும் அமரர் ஜீ.ஜீ.இறந்தபோது 'புடம் போட்ட பொன்னை மீண்டும் புடம் போடவா தீயிலிட்டார்?' என ஆசிரியர் தலையங்கம் எழுதிய அன்னாரின் பேனாவையும் இன்றுவரை எவரும் மறக்கமுடியாது.


சிரித்திரன் சுந்தர் ஆங்கிலத்தில் எவ்வாறு புலமை மிக்கவரோ அவ்வாறே தமிழ் மொழியைக் கையாள்வதில் மிகுந்த தேர்ச்சி மிக்கவர். குமுதம், கல்கண்டு, கல்கி, ஆனந்த விகடன் ஆகிய ஏடுகளைத் தடைசெய்தால்தான் ஈழத்தின் தமிழ்ப் பத்திரிகை விற்பனையாகும என்ற கோட்பாட்டுக்கு எதிரானவர் சிரித்திரன் சுந்தர். ஆயிரம் பூக்கள் மலரட்டுமே என்ற கோட்பாட்டை அடிநாதமாகக் கொண்டு 340 சிரித்திரன் இதழ்களை வெளியிட்டு நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களை முன்னணிக்குக கொண்டு வந்த இந்த உயர்ந்த மனிதனை காலம் ஒருநாளும் மறந்து போகக் கூடாது என்பது எமது வேணவா!

சிரித்திரன் சஞ்சிகைக்கு விஜயம் செயத புகழ்பூத்த எழுத்தாளர் மணியன் தனது வார வெளியீடான 'இதயம் பேசுகிறது'என்ற ஏட்டில் சிரித்திரன் இலக்கிய நகைசசுவைப் பணிகளை விதந்து எழுதினார்.

இவரால் மகுடி என்ற பெயரில் வெளியிடப்பட்ட கேள்வி பதில்கள் சிரித்திரன் என்ற சிரிப்பு ஏட்டில் 35 வருடங்கள் வெளிவந்தன. சிந்தனையைத் தூண்டும் இக்கேள்வி பதில்கள் ஆங்கிலத்தில் அங்கதமாக சிந்தித்த ஒஸ்கார் வைல்ட் (Oscor Wilde)போன்றவர்களின் சிந்தனைக்கு ஈடு இணையானது.

1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து அவரால் கீறப்பட்ட சவாரித் தம்பர் ,சின்னத் தாத்தா, மைனர் மச்சான், ஸ்ரீமான் செல்லக்கிளி, மிஸ்டர் அன் மிஸிஸ் டாமோடிரன் என்ற பகுதிகளை இலகுவில் எவரும் மறக்கமுடியுமா?

மாமனிதர் என பிற்காலத்தில் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். இந்த மாண்புடைய மனிதனை யாரும் மறக்க முடியாது. ★




## பெண்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(திருநெல்வேலி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதற்காகச் சென்ற 4 பெண் பிள்ளைகள் வடமராட்சி விடுதலைப் புலிகள் அலுவலகத்தில் வைத்து அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

18 வயதுக்குட்பட்டவர்களான இந்த நான்கு பேரில் இருவர் நேற்று முன்தினமும், இருவர் நேற்றுக் காலையும் விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் தயாவினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது விடயம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-43)

## வேம்படி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் முதல மூன்று இடங்களையும் முறையே வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மகாஜனாக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியன பெற்றுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்ட விவாதப் போட்டியில் யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் இசை ஆராதனை இன்று புதன் கிழமை அ. ஜெயராமனின் வயலின் பக்கவாத்தியங்களுடன் இடம்பெறவுள்ளது. (உ-8)

# தமிழரின் வாக்குப் பலத்தைக் கண்டு குழம்புகிறது இனவாத அரசு

## இராணுவ ஆய்வாளர் தராக்கி

(கொழும்பு)

இராணுவ அரண்களுக்குள்ளேயே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதில் இலங்கை அரசு உறுதியாக இருந்து அதற்கான முடிவையும் எட்டியுள்ள நிலையில், மாற்றுவழியைத் தமிழ்மக்கள் தேடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என இராணுவ ஆய்வாளர் தராக்கி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் கருத்து வெளியிட்டுள்ள தராக்கி, இந்தத் தேர்தலினைத் தமிழ்மக்கள் தமது உரிமைகளுக்கான கருத்துத் தொிவிப்பாகக் கையாளவுள்ளதால், தமிழ் மக்கள் அனைவரும் வாக்களித்தால் தமக்கு ஆபத்தாகிவிடும் எனக் கருதி இலங்கை அரசு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலோ, நடுநிலைப் பகுதியிலோ தேர்தலை நடத்துவதில்லை என ஏற்கனவே முடிந்த தீர்மானமாக்கிவிட்டு இழுத்தடிப்புக்களைச் செய்துவிட்டு அதையே முடிவாக எடுத்துள்ளது.

இதில் தவறாது வாக்களிக்க வேண்டிய வரலாற்றுக்கட்டுப்பாடு தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் விடுவிக்கப்பட்ட பகுதித் தமிழ்மக்கள் தேர்தலுக்கு முதலே இராணுவப் பகுதிக்குள் சென்று அதிகளவில் வாக்களிக்க வேண்டும் என சிலர் முன்வைக்கின்ற கருத்துக்களே நடைமுறைச் சாத்தியமாகத் தெரிகின்றது.

தமிழ்மக்களை முழுமையாக வாக்களிக்கச்செய்யவிடாது செய்ய அரசு தீர்மானமாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார். (உ)

# தேர்தல் தினத்தன்று சோதனை நடவடிக்கைகளில் தளர்வில்லை

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுபபாட்டுப் பகுதி மக்கள் அனைவரையும் வாக்களிப்பில் ஈடுபடுத்தும் பொருட்டும், குறித்த நேரத்திற்குள் வாக்களிப்பைப் பூர்த்தி செய்யும் வகையிலும் மேலதிக சோதனைச் சாவடிகளை அமைக்கும் முயறசியில் படையினர் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா,

தேர்தல் காலத்தில் சோதனைச் சாவடிகள் திறந்தே இருக்கும். ஆனாலும், சோதனை நடைமுறைகளில் எந்த வகையிலும் தளர்வு ஏற்படுத்தப்படமாட்டாது.

அத்துடன், தேர்தல் ஆணையாளரின் வேண்டுகோளுக்கு அமைவாகவே வடக்கு, கிழக்கில் படைத்துறையினர் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவித்துள்ளார். (உ)

# பௌத்த அரசியல்வாதிகளால் நாட்டிற்குப் பயனேதுமில்லை

## மல்வத்தை பீடாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பௌத்த அரசியல்வாதிகள் பிரித் நூலைக் கையில் கட்டியிருக்கிறார்களே தவிர பௌத்தர்களுக்கு எதுவும் செய்வதில்லை என மல்வத்தை பீடாதிபதி ரம்புக்வெல்ல ஸ்ரீ விபசிதேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தேரரிடம் கையளிக்கச் சென்ற சிங்களே மகா சம்மத பூமி புத்திர கட்சியின் தலைவர் பீரிஸ் சந்திரவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே பீடாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையான கட்சிஉறுப்பினர்கள், மேல்வர்க்கத்தவர்களாக இருக்கின்ற நிலையில், இவர்களால் நாடு முன்னேற்றம் அடையும் என்பது சாத்தியம் இல்லாத ஒன்று.

இதேவேளை, பூமிபுத்திர கட்சியைச் சேர்ந்த கலாநிதி விஜேதுங்க இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடுகையில்,

இன்று இந்நாட்டின் அரசியலவாதிகள் கஷ்டப்படுவது, தமது ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காகவே அன்றி, நாட்டின் அபிவிருத்திக்காக அல்ல.

இவர்களிடம் நாட்டு அபிவிருத்திக்கான சரியான திட்டங்கள் எதுவும் கிடையாது. பௌத்த மதத்தை விலைபேசும் கைங்கரியத்தில், வெளிநாட்டுச் சக்திகள் பல ஈடுபட்டு வருகின்றன.

தேர்தலில் போட்டியிடுவதற்குப் பதிலாக பிக்குகள் தமது கட்சியை ஆதரிக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (உ)

# சர்ச்சைக்குள் சிக்கியுள்ள கதிர்காமர் கட்சிக்குள் சிக்கல், சந்தேகம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால், தொடரும் பேச்சுவார்த்தைகள், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில், விடுதலைப் புலிகளுடன் மட்டுமே தனியாக நடாத்தப்படும் என்று லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்புப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி, தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கியுள்ள ஈ.பி.டி.பி., முஸ்லிம் கட்சிகளும், இடதுசாரிக் கட்சிகளும், சில பௌதத அமைப்புக்களும், ஏனைய சிங்கள இனவாத அமைப்புக்களும் கதிர்காமரின் இந்தக் கருத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இதற்கு ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து விளக்கம் கேட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியபோது, எதிர்க்கட்சியை இணைத்துக்கொள்ளாததனாலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட நேர்ந்தது என்று ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் தெரிவித்து வந்த காரணத்தை மறந்து எதிர்க்கட்சியின் பிரதிநிதித்துவமின்றி, ஆளும்கட்சி விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்ற கதிர்காமரின் கருத்தே மேலதிக சிக்கலையும் சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளது.

இதற்கிடையில், தேர்தல் முடியும் வரை, இனவாதக் கருத்துக்களை மறைத்து, சமாதானம், பேச்சுவார்த்தை, புனரமைப்பு. மக்கள ஆட்சி போன்றவை குறித்து அதிகமாகப் பிரசாரம் செய்யும்படி, தனது கூட்டணியின் அங்கத்தவர்கள் அனைவரையும் ஜனாதிபதி சந்திரிகா கடுமையாகப் பணித்துள்ளதாகப் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

# உரைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிலேடைக் கவிமணி ஆசிரியர் க.கணபதிப்பிள்ளை எழுதிய 1922 செய்யுள்களைக் கொண்ட கந்த புராணம் யுத்தகாண்டத்தின் முதற் பதினொரு பாடல்களுக்கான உரை நூல் வெளியீட்டுவிழா எதிர் வரும் 6 ஆம்திகதி சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

62

## மூன்றாம் பகுதி

## திருகோணமலைத் தமிழரின் வழமைகள்

### 1.திருகோணமலை வன்னியரும் கோணேசர் கோயில் வழமைகளும்

### நான்கு வன்னிமைகள்

இலங்கை வடகிழக்குப் பிராந்தியத்தில் முற்காலங்களிலே வன்னியரின் ஆட்சியின் கீழமைந்த நான்கு குறுநிலப்பிரிவுகள் இருந்தன. திருகோணமலை, கட்டுக்குளம் பற்று, தம்பலகாமம் பற்று, கொட்டியாரம் பற்று என்பவையே அந்நான்குமாகும். கோணேசர் கல்வெட்டு என்னும் நூலில் அந்நான்கு பிரிவுகளிலும் ஆட்சி புரிந்த வன்னிபங்களின் பேர்கள் அடங்கியுள்ளன. அந்நூலின் உரைநடைப் பகுதியில் வன்னிபம் வரவு, காரைநகரால் வந்த வன்னிபம், சோழ நாட்டு வன்னிபம், மருங்கூர் வன்னிபம் என்ற தலைப்புகளின் கீழான பகுதிகளிலே வன்னிபங்களின் பெயர்கள் மட்டுமே உள்ளன. அவற்றுள் இரண்டாம், மூன்றாம், நான்காம் பிரிவுகளில் முறையே 37,31,47 என்ற எண்ணிக்கையில் வன்னிபங்களின் பெயர்கள் உள்ளன. திருகோணமலைப் பிராந்தியத்தில் அமைந்த நான்கு வன்னிமைப் பிரிவுகளுக்குந் தலைவர்களாக விளங்கிய வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்த வன்னிபங்களின் பெயர்ப்பட்டியல்களாகவே அவை கொள்ளத்தக்கவை. திருகோணமலை வன்னிபங்கள் பூபாலக்கட்டு என்னுமிடத்திலுள்ள மாளிகையில் வாழ்ந்தனர் என்பதைக் கோணேசர் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. தனியுண்ணாப்பூபால வன்னிபங்கள் 32 பேரின் பட்டியலொன்றும் இந் நூலில் உள்ளது.

வன்னிபங்களின் தோற்றம் கோணேசர் கோயிற் பரிபாலனத்தின் அம்சமானதென்பது கோணேசர் கல்வெட்டின் கோட்பாடாகும் . குளக்கோட்டன் மூலமாகவே திருகோணமலையில் வன்னிபங்கள் தோன்றினர் என்ற கருத்திற்குக் கோணேசர் கல்வெட்டுப்பாடல்கள் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன. திருகோணமலை,கட்டுக்குளம் ஆகியவிரண்டு பிரிவுகளுக்குமுரிய வன்னிபங்களைக் குளக்கோட்டன் நியமித்தான் என்றுஞ் சொல்லப்படுகின்றது. திருகோணமலை வன்னிபம் பற்றிக் கோணேசர் க்ல்வெட்டில் மேல்வரும் பாடல்கள் உள்ளன.

### வன்னிமையின் உற்பத்தியும் அதிகாரமும்

தானம் வரிப்பதென்னும் அரன் தொழும்பார்க்குள்
இகலார் தர்க்கம் வந்தால்
மானபங்கமடையாமல் நடுத்தீர்பதார் எனவே
மதுரையூர் சென்று
ஆனமதிக்குலராமன் தனியுண்ணாப் பூபாலன்
தனைக்கொணர்ந்து
தேனமர்பூந் தொடைமார்பன் திருக்கோண
நகரரசு செய்ய வைத்தான்
வைத்த புகழ் வன்னிமையே நீதிசொல்வேன்
மகத்தான பாசுபதமறையோர் தங்கள்
சித்தமது நேராக நீதிசொல்வாய் சிவபூசை
முதலொழுக்கந் தவறினாலும்
குற்றமென்றே எண்ணி மிகக் கோபங் கொண்டால்
கோணமலை நாதரிடஞ் சொல்வார் சொன்னால்
சுற்றுமே பிரமகத்தி வங்கிஷ முற்றும்
தொகையாக மற்றவற்குச் சொல்வோம் குற்றம்

சுத்தமிகு வன்னிமையே குற்றஞ் செய்தால் துலங்கு
விலங்கடி உயிருக்குயிரே வாங்கு
நிர்த்தமிடு மடவியர்கள் குற்றம் செய்தால்
நிறை புனலில் நிறுத்தி வைத்துத் தேங்காய் வாங்கு
மற்றை மதிநுதல் மடவார் குற்றஞ் செய்தால்
மண் கடகம் ஏற்றியடி வழக்கு நோக்கி
இத்தகைய இராசாங்கம் செய்நீ என்றே இரத்னமணி
ஆசனத்தில் இருத்தி வைத்தான்
வையமிகு வன்னிமையே இன்னும் கேளாய்
மனு நீதி தவறாதே கோபம் பாவம்
ஐயமற உன் தாரம் தாரமாகும் அயலவர்கள்
தாரமெலாம் தாயாராகும்
மெய்யை எடு பொய்யை விடு வன்மம் வேண்டாம்
வறுமையுள்ளோர்க்கு உதவி செய்வாய் இகல் பண்ணாதே
மையனைய கன்டர் திருக்கோணை நாதர்
மகா பூசை திருப்பணியும் வழங்கச்செய்யே.

1. வன்னிமையின் உற்பத்தி, 2 வன்னிபம் பேண வேண்டிய ஒழுக்க நெறி, 3. நீதிபரிபாலனத் துறையில் வன்னிபத்திற்குரிய அ்திகாரம் (4) கோணைநாதர் கோயில் தொடர்பாக வன்னிபத்திற்குரிய கடமைகள் ஆகிய நான்கு விடயங்கள் பற்றி இப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. கோயிலார் மீது அதிகாரஞ் செலுத்துவதற்கும், அவர்களிடையே ஏற்படக்கூடிய தகராறுகளைத் தீர்ப்பதற்கும் வன்னிபம் என்னும் பதவி உருவாக்கப்பட்டதென்ற கருத்து முதலாவது செய்யுளிலே வலியுறுத்தப்படுகின்றது.

### வழமையும் ஐதீகமும்

வன்னிமையின் உற்பத்தி பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் கூறும் விளக்கத்தில் ஈரம்சங்கள் உள்ளன. ஒன்று அது தோன்றிய சூழ்நிலை பற்றியது; மற்றையது வன்னிபத்தின் பிரதானமான அதிகாரங்களைப் பற்றியது. நீதிமன்றம் ஆகிய நடு என்பதற்குத் தலைமைதாங்கி, வழக்குகளை விசாரணை பண்ணித் தீர்ப்பு வழங்குவதும் திருகோணமலை நகரிலே அரசாங்கஞ் செய்வதும் வன்னிபத்தின் அதிகாரங்கள் என்றே சொல்லப்படுகின்றது. இது தனது காலத்து வழமைகளின் அடிப்படையிலும் தேசவழமையின் அடிப்படையிலும் நூலாசிரியர் குறிப்பிடும் கருத்துக்காளாகும். அவை ஆதாரபூர்வமானவை என்பதில் ஐயமில்லை. ஆனால் வன்னிமையின் உற்பத்தி பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் கூறுவனவற்றிலே சில சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

குளக்கோட்டன் “மதுரையூர் சென்று ஆனமதிக்குலராமன் தனியுண்ணாப் பூபாலன் தனைக் கொணர்ந்து ... திருக்கோணை நகரரசு செய்ய வைத்தான்” என்று நூலின் பாடல் ஒன்றிலே சொல்லப்படுகின்றது. இதே கருத்தை உரைநடைப்பகுதி மேல்வருமாறு கூறும்: “செங்கமல மலர் மாதுதங்கு புயசெயராச சேகரர்கள் அடிபரவு கோன் தினகரன் குலமதனில் வரு குளக் கோட்டு மன் சென்று மாமதுரையணுகித் திகழ் மதிக்குலராமன் தனியுண்ணாப் பூபால வன்னிபம் முதலாக எத்தனை வன்னிபம் இத்தலத்துக்கு அரசுரிமை பண்ணினதென்று கனகசுந்தரப் பொருமானைக் கேட்க அவர் சொன்ன வசனம்.....”

(தொடரும்)

## மக்களின் தரத்தைக் குறைத்து மதிப்பிடுகிறார் பிரதமர் ரணில்

### ஐ.ம.சு.மு. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்நாட்டில் மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடுக்கும் எண்ணம் தமக்கில்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகள் கூறி வருகிறார்கள். நாட்டு மக்களும் யுத்தத்தை விடுத்து சமாதானத்தையே நாடுகிறார்கள். தேசிய அரசியல் நெருக்கடிகளுக்குப் பேச்சுவார்த்தை மூலமான இணக்கப்பாட்டையே கூட்டமைப்பும் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ள நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரம் சிங்க பூச்சாண்டி காட்டி வருகிறார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் ஆட்சி அமைத்தால் யுத்தம் வெடிக்கும் அபாயம் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அடிக்கடி கூறி வருவதை நிராகரித்தே சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மீண்டும் ஒரு யுத்தம் வரும் என அடிக்கடி கூறிவருவது மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகவுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதலே அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி கண்டபோதும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதனாலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியவில்லை என்று கூறி வருவது ஏற்புடையதல்ல என்று கூறிய சுசில் பிரேம ஜயந்த, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றதன்பின்பே கிழக்கில்வன் முறைச் சம்பவங்கள் குறைந்திருப்பதா கவும் தெரிவிததார். (ம)

## பொதுத் தேர்தல் பணியில் ஊர்காவல் படையினரும்

(கொழும்பு)

நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களுக்காக கட்டப்பட்டுள்ள பெரிய அளவிலான கட் அவுட்கள், சுவரொட்டிகள், பதாதைகள் என்பவற்றை வீடியோப் படம் பிடிப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவு ஒன்றை பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா அமைத்துள்ளார்.

பொலிஸ் பிரிவின் உதவியு டன் இவ் வீடியோப் பிரிவினர் வேட்பாளர்கள் செய்கின்ற தேர்தல் பிரசார முறைகள் குறித்து தகவல்களைப் பெறுவர்.

இத்தகைய கட் அவுட்கள் வைக்கப்பட்டிருந்தால் அவற்றினை அகற்றும் பொறுப்பும், இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவோ தங்கள் சட்டத்தை மீறியவர்கள் மீது தண்டனை வழங்கவும் தவறியவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பும் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் உண்டு. தேர்தல் விதிமுறைகளின் படி கட் அவுட்கள், சுவரொட்டிகள், பதாதைகள் என்பன பயன்படுத்தக கூடாது. இதைப்பற்றி சில பொலிஸார் அறியாமல் இருக்கிறார்கள் என பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கிலும் கிழக்கிலும் சேவையாற்றி வரும் ஊர்காவல் படையினர் தேர்தலின் போது பொலிஸாருக்கு உதவி புரிவதற்காக நாடு முழுவதற்கும் அனுப்பப்படவுள்ளனர். தேர்தலின் போது பொலிஸாருக்கு உதவி புரிவதற்காக இம்முறை வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு இவர்கள் அனுப்பப்படுவர்.

இவர்களில் ஒரு பகுதியினர் தேர்தல் கடமைகளில் ஈடுபட மிகுதிப பிரிவினர் வழமையான இடங்களில கடமையாற்றுவர். இதற்கென கிட்டத்தட்ட 100 ஊர் காவல் படையினா கண்டிக்கு மட்டும் அனுப்பப்பட்டுள்ளனர். இதற்கென இவர்களுக்கு விசேஷ கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (உ-6)







தென்மராட்சிப் பகுதியில் உள்ள தென்னந் தோட்டங்கள் போரின் காரணமாக அழிந்து போனமை தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருடனான சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# பொலிஸ்மா அதிபர் நியமனத்தை எதிர்த்து

# மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஓய்வுபெறறபின்னா் பொலிஸ்மா அதிபர் இந்திரா ஆர்.டி சில்வாவை மீண்டும் அதே பதவிக்கு நியமித்தது சட்டவிரோதமானது என்று தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற சிறைச்சாலை ஆணையாளா சி.ரி.ஜான்ஸ் உட்பட 10 புத்திஜீவிகள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

இந்திரா ஆர்.டி சில்வா ஜனாதிபதி செயலாளர் டபிள்யூ ஜே.எஸ். கருணாரத்தின, அரசியல் அமைப்புச் சபைத் தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா உட்பட 31பேர் இநத மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் தொடர்ந்தும் கடமையாற்றுவது சட்டபூர்வமற்றது என்று மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பெபரவரி மாதம் 18ஆம் திகதி ஓய்வுபெற்ற பின்னர் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றுவது சட்ட விரோதமானது என்றும் அதனை தடைசெய்ய உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (உ-2)

## யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு

## 191 கொலை, கொள்ளை சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 2ஆயிரத்து 562 குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் வட்டாரங்களின் தகவல்களின் அடிப்படையில் மனித நேய அமைப்புக்களின் அலுவலகம் வெயிட்டுள்ள அறிக்கையிலேயே இப்புள்ளிவிபரம வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், கடந்த ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் 191 கொலை, கொள்ளைச் சம்பவங்களும், 808 சட்டவிரோத மதுபான உற்பத்தியுடன் தொடர்புடையவையும், ஆயிரத்து 164போக்குவரத்து விதிகளை மீறியவையும், 62விவாகரத்து மற்றும குடும்பப் பிரச்சினைகளும், 14 காணிப்பிரச்சினைகளும் இடம்பெற்றுள்ளதுடன், ஏனைய 323 குற்றச்செயல்களும் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை, கடந்த ஆண்டில் சம்பளப் பிரச்சினைகள் மற்றும் பதவி உயர்வுப் பிரச்சினைகள் தொடர்பான சுமார் ஆயிரத்திறகும் அதிகமான முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-16)

## வர்த்தக நிலையங்களுக்கு

## மாநகரசபை அறிவுறுத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக குடபட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு நிலையங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவது குறிதது அவ் வர்த்தக நிலையங்களுக்கு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாசன் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில்,

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், உணவு உற்பத்தி நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் மனிதப் பாவனைக்கு உதவாத, காலாவதியாகிய, சுட்டுத்துண்டு இன்றி பொதி செய்யப்பட்ட உணவுப பொருட்களை விற்பனைக்காக அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது எமது பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழுவினது திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றை முழுமையாக அழிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே தரமானதும், விற்பனைக்குகந்ததுமான உணவுப்பொருட்களையே விறப்னைசெய்யுமாறு அனைத்து உணவு உற்பத்தி செய்வோர் மற்றும் விற்பனையாளர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தவறின் அவர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-18)

## அரசாங்க மருத்துவப் பணியாளர்

## மற்றோர் போராட்டத்திற்கு முஸ்தீபு

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்கும் விதமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மருத்துவர்கள் மற்றும் சிறப்பு நிபுணர்கள் மத்தியில் சம்பள ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கபட்ட குழு எதிவரும் 10ஆம் திகதிக்கு முன்னர் நிதி அமைச்சின் செயலாளரிடம் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விடதது 11ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடதத் தீர்மானிததுள்ளதாக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் 17ஆம் திகதிக்குள் இவ் அறிக்கை சமர்ப்பிக்கபபடாவிட்டால் மறுநாள் முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுமென வும் அச்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (உ-60,8)

# செய்தித் துளிகள்

### விசாரணை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களபபு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளையின் படுகொலை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளுக்காக இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதீவாகர தெரிவித்தார்.

விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் இதுவரை துப்புத் துலக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். (உ-2)

### கலந்துரையாடல்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் புதிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டறவுச்சங்கம் அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு மண்டபதில் பனை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.புவனேநதிரராசா தலையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ்.மாவட்ட பனை தென்னை அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளி.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர், கடற்புலிகளின் மக்கள் தொடர்பாளர் மறவன் மாஸ்டர், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பொறுப்பாளர் தீபன், பருத்தித்துறை பனை தென்னை கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர், கூட்டுறவுப் பரிசோதகர்கள், பொ்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (உ-35)

### தீக்குளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவ உதய நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் இறுதி நாளான எதிர்வரும் 5ஆம் திகதி அன்று தீக்குளிப்பு, குளிர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது. (உ)

### சிசு உதான சேமிப்பு அலகு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி வல்வெட்டித்துறைக் கிளையின் அனுசரணையுடன், தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை நண்பகல் 12மணிக்கு "சிசு உதான" சேமிப்பு அலகு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மகாவித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில, மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் சேமிப்பு அலகை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (உ-18)

### பன்றிகளால் பயிர்கள் நாசம்

(பாஷையூர்)

அச்சுவேலி, பததமேனி ஆகிய பகுதி விவசாயிகள் பன்றிகளால் பெரும் இடைஞ்சல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப் பகுதி பயிர்செய் நிலங்களில் தற்போது வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் அறுவடைக்குத் தயாராகும் வேளையில் கூட்டம், கூட்டமாக இரவில் புகும் பன்றிகள் இப்பயிர்களை மிதிததும், கிளறியும், வெட்டியும் சேதப்படுத்தி வருகின்றன.

இதேவேளை, கடும்பனி மத்தியில், பனறிகளை விரட்டுவதற்காக விவசாயிகள் விளைநிலங்களில் காவல்புரிந்து வருகின்றதும் குறிப்பிடத்தக்கது. (உ-72)

### வினைத்திறன் காண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரச முன்னுரிமை நடவடிக்கைகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டு வேறு பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வே.பேயாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளுககு அரச துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் அரசாங்கப் பாடசாலைகளில் புதிதாகப் பதவிகள் உருவாக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண சேவையில் இவ்வாறான பதவிகளில் அமர்த்தப்படவுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை இதுவரை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

### சந்தை புனரமைப்பு

(மருதங்கேணி)

கடந்த 13ஆண்டுகளின் பின் முள்ளிப்பற்று, இயககசசி பொதுச் சந்தையை மீண்டும் இயங்கவைக்க பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது சந்தைக்கான கொட்டகை அமைக்கப்பட்டு அதன் புனரமைப்புப் பணிகள் முற்றாக முடிவடையும் நிலையில் உள்ளது. இப் பணி முடிவடைந்ததுடன் மக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளது. (தி-35)

### சிறுவர் விடுதி திறப்பு

(வவுனியா)

வவுனியா பொது மருத்துவமனையில் சகல வசதிகளையும் கொண்ட சிறுவர் பராமரிப்பு விடுதி ஒன்று அணமையில் திறந்துவைக்கப்பட்டது.

யுனிசெவ் நிறுவனத்தால் 1.8 மில்லியன் ரூபா செலவில் கட்டப் பட்ட இவ் விடுதியை நிறுவனத் தின் பிரதிநிதி டெட்செபான் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையில் நடை பெற்ற நிகழ்வில் தலா ஒரு லட் சத்து 28ஆயிரம் ரூபா பெறுமதி யான மோட்டார் சைக்கிள்களை சுகாதார வெளிக்கள உத்தியோக தர்களுக்கு வழங்கினார். (தி-35

### கண்காட்சி

(கோப்பாய்)

கோப்பாயக்கோட்ட பாடசாலை கட்கிடையேயான ஆரம்பப் பிரிவு கற்பித்தல உபகரணக் கண்காட் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயி றுக்கிழமை புத்தூர் சோமஸ்க தாகல்லூரியில் நடைபெறவு ளது. (தி-7

### வெளிவாரிப் பரீட்சை 15ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக 2001 கல்வி ஆண்டு மாணவர்களுக்க கலைமாணி பகுதி II, சிறப் கலைமாணி பகுதி II, வெ வாரிப்பரீட்சைகள் எதிர்வரும் 15 திகதி முதல் 25ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைக்கான நேர அ வணை மற்றும் பரீட்சை அ வணைகளை எதிர்வரும் 10ஆம் புதன்கிழமை அலுவலக நேரத் வநது பெற்றுக்கொள்ளுமாறு வெ வாரிப் பட்டப்படிப்புகளுக்கான உ பதிவாளர் பரீட்சார்த்திகளுக்கு வித்துள்ளார்.

அததுடன், இம்முறை வ வளாகத்தில் இப் பரீட்சைகள் பெறமாட்டாது எனவும் அ கப்பட்டுள்ளது.(உ-18)

## சைவ பரிபாலன சபை நடாத்திய

## சைவ நெறித்தேர்வு முடிவுகள்

யாழ்சைவ பரிபாலனசபை கடந்த ஆண்டில் நடத்திய சைவ நெறித் தேர்வில் சித்தியடைந்து பரிசு பெறுவோர் விபரம் வெளியிடப் பட்டுள்ளது.

பிரிவு ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெறுவோர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெறவிருப்பதோடு இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிவரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30மணிக்கு சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரிவு ரீதியாக முதல் 3இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**தரம்-2**

1ம் இடம்:-கோ.மயூரி-யா.துன்னாலை காசிநாதர் வித்தி.
2ம் இடம்:- சி.குமரேசன்-மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி.
3ஆம் இடம்:-தே.லக்ஸ்மன், இணுவில் மத்தியகல்லூரி.

**தரம்-3**

1ம் இடம்:-சோ.திரியம்பகி-இந்து ஆரம்ப பாடசாலை.
2ஆம் இடம்:-சி.கிரீசனா-சரசாலை ஸ்ரீகணேச வித்தி.
3ம் இடம்:-த.கோகுலன்-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.

**தரம்-4**

1ம் இடம்:-சி.மேகலாதன்-புனித ஜோன் பொஸ்கோ வித்தி.
2ம் இடம்:-ஸ்ரீ.அச்சுதை-கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
3ம் இடம்:-ப.பிரசாந்தினி-இணுவில் இந்துக்கல்லூரி.

**தரம்-5**

1ம் இடம்:-யோ.துஷிகன்-உசன் இராமநாதன் மகாவித்தி.
2ம் இடம்:-ந.சிந்துஜா-கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை
3ம் இடம்:-பா.சங்கீதா-அத்தியார் இந்துக்கல்லூரி.

**தரம்-6**

1ம் இடம்:-மு.ஜனார்த்-மன்/உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை.
2ம் இடம்:-கு.கஜவதனி-ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை.
3ம் இடம்:-ந.ஜெனா-சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.

**தரம்-7**

1ம் இடம்:-பா.மதுரா-மெதடிஸ் பெணகள் உயர்தர பாடசாலை.
2ம் இடம்:-சி.மாதுமை-ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
3ம் இடம்:-செ.தர்சிகா செல்வராசா-யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம்-8**

1ம் இடம்:-வி.சுயந்தன்-கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.
2ம் இடம்:-ஆ.விஜிதா-வட இந்து மகளிர் கல்லூரி.
3ம் இடம்:-சி.நிவேதினி-கோப்பாய் நாவலர் வித்தி.

**தரம்-9**

1ம் இடம்:-தே.தர்சினி-கிளி.கனகாம்பிகைக்குளம் அ.மி.த.க.பாடசாலை.
2ம் இடம்:-க.நித்தியா- விக்ரோறியாக் கல்லூரி
3ம் இடம்:-இ.கல்யாணி இராஜதுரை-வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா.

**தரம்-10**

1ம் இடம்:-ஆ.அனுசுஜா-யா/மகாஜனாக்கல்லூரி.
2ம் இடம்:-பா.ஜனார்த்தனன்-யா/இந்துக்கல்லூரி
3ம் இடம்:-தே.துஷ்யந்தி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**தரம்-11**

1ம் இடம்:-க.கலைவாணி-கம்பர்மலை அ.த.க.பாடசாலை.
2ம் இடம்:-வே.சாமந்தி-வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை.
3ம் இடம்:-ஞா.தர்சியா-சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**தரம்-12 (இந்துநாகரிகம்)**

1ம் இடம்:-ப.நிதர்சனா-திருக்குடும்ப கன்னியர் மடம்.
2ம் இடம்:-ஸ்ரீ.அநோஜனா-யா/இந்து மகளிர் கல்லூரி.
3ம் இடம்:-அ.தட்சணாமூர்த்தி-யூனியன் கல்லூரி

**திரம்-12 இந்துசமயம**

1ம் இடம்:-இ.ரதீபா-கிளி.இராமநாதபுரம் மகா வித்தி.
2ம் இடம்:-ச.றோகினி-கிளி.வட்டக்கச்சி மகா வித்தி.
3ம் இடம்:-ப.குகப்பிரியா-நயினாதீவு மகா வித்தி.

**தரம்-13 இந்துநாகரிகம்**

1ம் இடம்:-ச.தாட்சாயினி-பெரியபுலம் மகா வித்தி.
2ம் இடம்:-இ.லஜிதா-வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை
3ம் இடம்:-இ.மயூரவதனி-இராமநாதன் கல்லூரி.

**தரம்-13 இந்துசயம்**

1ம் இடம்:-கா.பிரியதர்சினி-திருவையாறு மகா வித்தி.
2ம் இடம்:-ம.மேனகா-பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தி.
3ம் இடம்:-க.யோககெளரி-சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (உ-19)

# ஹெயிட்டி ஜனாதிபதி பதவி கவிழ்ப்புக்கு அமெரிக்காவே காரணம் என குற்றச்சாட்டு

(கராரே)

பதவி கவிழ்க்கப்பட்ட ஹெயிட்டி ஜனாதிபதி ஜோன் பேட்சன் அரிஸ்ரைட் அமெரிக்காவே தம்மை ஆட்சிபீடத்தில்- இருந்து தூக்கி எறிந்தது என்று குற்றம் சாட்டியிருக்கின்றார்.

தற்போது தங்கியிருக்கும் மத்திய ஆபிரிககக் குடியரசில் இருந்து, சீ.என்.என். தொலைகாட்சிக்கு வழங்கிய பேட்டியில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஹெயிட்டியில் இரத்தக் களரியைத் தடுக்கவேண்டுமானால் அங்கிருந்து வெளியேற வேண்டும் எனத் தமக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் வார இறுதியில் நாட்டை விட்டு வெளியேறும் படி தாம கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

திடீர் புரட்சிக்கு பலியானதாக அவர் அமெரிக்கத் தொலைக் காட்சி மறறும் செய்தி ஏஜென்டுகளிடம் கூறினார்.

அமெரிக்கப் பாதுகாப்பு ஏஜெண்டுகளின் கோரிககைகளுக்கு இணங்காவிட்டால் ஹெயிட்டியில் வன்முறை மூளும் என்ற அச்சத்தின் பேரில் பதவி விலகும் ஆவணங்களில் தாம் கையொப்பமிட நேர்ந்தது என்று அவர் தெரிவித்தார்.

ஆனால் அரிஸ்ரிரைட் அவர் கடத்தப்பட்டதாக வெளியான செய்திகள் பற்றி பதிலளித்தபோது இதுவும் ஒரு நவீன பாணியிலான கடத்தல் தான் என அவர்குறிப்பிட்டார்.

(து-9)



பிலிப்பைன்ஸ் நாட்டின் கப்பல் ஒன்று அண்மையில் கடலில் தீப்பற்றி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த கப்பல் ஒன்று ஈடுபட்டுள்ளது.

## அரபாத்தின் ஆலோசகர் சுட்டுக் கொலை

(ரெல்அவிவ்)

பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்தின் முக்கிய ஆலோசகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

59 வயது நிரம்பிய ஹலீல் அல் ஷெபீன் என்ற அந்த ஆலோசகர் காஸாப் பள்ளாத்தாக்கில் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலல்ப்பட்டதாக சம்பவத்தை நேரில் கணடோரும் மருத்துவர்களும் தெரிவித்துள்ளனர்.

அனுபவம் மிக்க செய்தியாளரான ஜெபின் பலஸ்தீன அதிகார சபையன் நிதியுதவியோடு வெளியிடபபட்ட சஞ்சிகைக்குப் பொறுபபாக இருந்தவர்.

மனித உரிமைகள் விவகாரங்கள், ஊடகம் சம்பந்தமான விடையங்கள் ஆகியவற்றில் பலஸ்தீனத் தலைவருக்கு இவர் ஆலோசனை வழங்கி வந்தார்.

(து-9)

## கனேடியப் பிரதமர் போல்மார்டீன் கோபி அனான் சந்திப்பு

(நியூயோர்க்)

கனடாவின் புதிய பிரதமர் போல மார்டீன் ஐக்கிய நாடுகள் சபைக்கு நேற்று விஜயம் செய்து, கோபி அனானுடன் ஹெயிட்டியின் நிலைமை பற்றி ஆராய்ந்துள்ளார்.

50 வயது நிரம்பிய ஜனாதிபதி அரிஸரைட் நேற்று முன்தினம் காலை நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

அவருக்கு எதிரான கிளர்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு 24 நாட்களின் பின்னர் அவர் ஹெயிட்டியை விட்டு வெளியேறியுள்ளார்.

வெளியேறுவதற்கு முன்னர் அவர் கருத்து வெளியிடுகையில், ஹெயிட்டியில் இரத்தக்களரியைத் தவிர்ப்பதற்காகவே தான் நாட்டிலிருந்து நீங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அயல் நாடான டொமினிக்கன் குடியரசுக்கு அவர் சென்றுள்ளார் என்றும் அங்கிருந்து வேறொரு ஆபிரிக்க நாட்டுக்குச் செல்லக் கூடும் என ஊர்ஜிதம் செய்யப் படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

(து-9)

## சீரற்ற இருதயத் துடிப்பு திடீர் மரணத்துக்கு ஏதுவாகும்

(வாஷிங்டன்)

அடிக்கடி கோபப்படும் மற்றும் பகைமை உணர்வைக கொண்டிருக்கும் ஆண்களின் இருதயம் சீரற்ற விதத்தில் துடிக்கின்ற தன்மையை கொண்டதாக மாறலாம் என அமெரிக்க ஆராச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இத்தகையோர் தணிந்த இயல்புகளைக் கொண்டோரை விட 30 சத வீதம் கூடுதலாக இருதய நோய்க்கு ஆளாகக் கூடியவர்களாக இருக்கிறார்கள் எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆய்வினை வழி நடத்திய விஞ்ஞானி கருத்துத் தெரிவிக்கும் போது, அதீத உணர்வுகளை வெளிபபடுத்துவது தேக ஆரோக்கியத்துககு சிறந்ததாக மாட்டாது எனத் தெரிவித்தார்.

சீரற்ற இதயத் துடிப்பு திடீர் மரணத்துக்கு வழிவகுக்கும் எனவும அவர் சுட்டிக் காட்டினார்.

(து-9)

# ஈராக் யுத்தம் தொடர்பாக சுதந்திர விசாரணை

## நடத்துமாறு அவுஸ்திரேலியா வேண்டுகோள்

(கான்பெரா)

ஈராக்கில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக, சுதந்திரமான விசாரணைகளை நடத்துமாறு, அவுஸ்திரேலியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹெவார்ட் 2 ஆயிரம் படையினரை ஈராக்கிற்கு அனுப்பியிருந்தார்.

ஈராக்கில் நடத்தப்பட்ட யுத்தம் மற்றும் அமெரிக்கப் படைகளின் நடவடிக்கைகள் குறித்து எழுந்துள்ள சர்ச்சையை அடுத்தே, அவுஸ்திரேலியப் பிரதமர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ், பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் ஆகியோர் திட்டமிட்டு மேற்கொண்டதாகக் கூறப்படும் கூட்டப் படைகளின நடவடிக்கைகளை ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் குழு இம்மாத நடுப்பகுதியில் ஈராக் செல்லவுள்ளது

இக்குழுவின் நடவடிக்கைகள் சுதந்திரமானதாகவும் நியாய மானதாகவும் அமைய வேண்டும் எனவும், ஈராக்கில் தேர்தல் ஒன்றை நடத்தும் வரையிலான காலப்பகுதியில் நிலவும் நிலவரங்களையும் இவர்கள் வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹெவார்ட் தெரிவித்துள்ளார்.

(து-9)



மொராக்கோவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 600 –க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். அங்கு நிவாரணப் பணிகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை. உணவிற்காக மக்கள் பெரும் அல்லல்படுகின்றனர். உணவுக்காக 4 மாத கைக்குழந்தையுடன் தவிக்கும் ஒரு தாய்.

## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இஸ்ரேல் அரசு தப்பிப்பிழைத்தது

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தப்பிப் பிழைத்திருக்கின்றது.

சர்ச்சைக்குரிய மேற்குக் கரை பாதுகாப்பு மதில் முதற்கொண்டு பொருளாதாரம் வரையான 5 விவகாரங்களின் அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்பிக்கப்பட்டிருந்தது.

காஸாப் பள்ளத்தாக்கில் உள்ள யூதக் குடியிருப்புக்களை அப்புறபபடுத்தும் ஷெரோனின் திட்டம் அவரது கூட்டணிக் கட்சிகளிடையே ஆத்திரத்தைக் கிளப்பியிருந்தாலும் நம்பிக்கையில்லாப பிரேரணை தோல்வி கண்டது குறிப்பிடத்தக்கது.

(து-9)

## தாய்வானின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஜனாதிபதி தேர்தல்

(தைபீ)

தாய்வானில் இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி சென் ஷுஜிபியானின் வெற்றி வாய்ப்பு தொடர்ந்தும் சந்தேகத்துக்கிடமானதாகவே இருக்கின்றது.

கடந்த வார இறுதியில் சீனாவுக்கு எதிராகப் பிரமாண்டமான மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றை நடத்தியதன் மூலம் அவரது செல்வாக்கு அதிகரித்துள்ள போதிலும் தேர்தல் முடிவு எவ்வாறு அமையும் என்று கூற முடியாது உள்ளதென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சீனாவிடம் இருந்து தாய்வான் முழுமையான சுதந்திரம் பெற வேண்டும் என வலியுறுத்திவரும் ஷென் கடந்த சனிக்கிழமை 20 இலடசம் மக்களைக் கொண்ட மனித சங்கிலப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்.

தாய்வானில் இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியை சேர்ந்த லியன் ஷென்னுக்கு 36.5வீதவாக்குகள் கிடைக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் சீனாவுடன் இணைந்திருப்பதா அல்லது பூரண சுதந்திரம் பெறுவதா என்பதை இத்தேர்தல் நிர்ணயிக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(து-9)

# பலஸ்தீனச் சிறுவன் கொலைக்கு இராணுவ அதிகாரியே காரணம்

## இராணுவ விசாரணைச் சபை தீர்ப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலில்,பலஸ்தீனச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டமைக்கு இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவரின்அலட்சியப் போக்கே காரணம் என்று அந்நாட்டு இராணுவ விசாரணைச் சபை அறிவித்துள்ளது.

மேற்குக் கரை நகரத்தின் சமீபமாக, 16 வயதான அல்சைட் என்ற சிறுவன் 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டதற்கு இந்த இராணுவ அதிகாரியே காரணம் என்று இராணுவ விசாரணை சபை தற்போது தீர்ப்பு வழங்கியுள்ளது.

இராணுவத்தினர் மீது கற்களை வீசிய கும்பலைக் கலைப்பதற்காக இராணுவக் கப்டன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அந்த துப்பாககிக குண்டு ஒரு வீட்டின் யன்னலூடாகச் சென்று வீட்டினுள் இருந்த சிறுவனைத் தாக்கியதால் அவன் உயிரிழந்தான்.

இந்த அதிகாரியின் செயல் அவரது அலட்சியப்போக்கையே காணபிக்கினறது என்று இஸ்ரேலிய இராணுவ விசாரணை சபை தெரிவித்துள்ளது.

கடந்த மூன்றரை வருடகால யுததத்தின் போது 2 ஆயிரத்து 361 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட போதிலும இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் எவரும் இதற்கு முன்னர் ஒரு போதும் இஸ்ரேல் இராணுவ விசாரணை சபையினால் குற்றம் காணப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

(து-9)

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. -குறள்

வலம்புரி

## தமிழ்க் கைதிகளுககு விடுதலை கிடைக்குமா?

தேர்தல் சூடு தென்னிலங்கையில் மிக வேகமாகப் பிடிக்கத் தொடங்கியுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன ஒன்றையொன்று எதிர்த்துப் பிரசாரம் செய்வதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இதேபோல் ஏனைய கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் ஒன்றையொன்று சாடி வருகின்றன. இதில் வேடிக்கை என்னவெனில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தனது தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டது எனக் குற்றஞ்சாட்டி வருகிறது.

அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியோ தனதுதேர்தல் பிரசாரத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இனங்காண பிரதமர் ரணில் தலைமையிலான கட்சி தவறிவிட்டது எனக் கூறி வருகிறது.

இதில் இரண்டு கட்சிகளுமே தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவில்லை என்பதே உண்மை. இது ஒரு புறம்.

ஆனால் சமாதானம் - சமாதானப் பேச்சு என்ற மகுட வாசகத்தோடு தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ள தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தாமே தீர்ப்பதுபோல் கோஷம் எழுப்பி வருகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பவர்களையே சிங்கள மக்கள் வரவேற்பார்கள் என்பதை உணர்ந்துகொண்டு பொய்யுரைகளை அள்ளிவீசி, சமாதானத்தின் தூதுவர்களாக தம்மைக்காட்டி - சிங்கள மக்களை ஏமாற்றி ஆட்சி அமைக்கும் முயற்சியில் இரு பிரதான கட்சிகளும் ஈடுபட்டுள்ளன.

உண்மையாகவே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என இரு கட்சிகளும் நினைத்திருந்தால், அழிவு அற்ற பூமியாக இலங்கைத் தீவு விளங்கியிருக்கும். ஆனால் இலங்கை பௌத்த சிங்கள தேசம் என்ற வக்கிர உணர்வு இரண்டு கட்சிகளிடமும் நிலைத்திருந்தது.

இதன் காரணமாகவே இலட்சக் கணக்கான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இதனைச் சிங்கள் மக்கள் நன்கு அறிவர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, நாட்டில் நிரந்தரச் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என இரண்டு பிரதான கட்சிகளில் எது விசுவாசமாக எண்ணுகின்றதோ, அந்தக் கட்சியினர் தமது கட்சியின் சமாதான உணர்வை - விருப்பை வெளிப்படுத்த உடனடியாகச் செய்யக் கூடிய ஓர் முக்கிய விடயம் உண்டு. அது என்னவெனில் பல வருடங்களாகச் சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகளின் விடுதலையாகும்.

ஆம், இரண்டு பிரதான கட்சிகளும் தாமே சமாதானத்தின் தேவ தூதர்களென மேடைகளில் முழங்கிக் கொட்டுவதை விடுத்து, சிறைகளில் வாடும் அப்பாவித் தமிழ் இளைஞர்களை விடுவித்து தமது சமாதான உணர்வை வெளிக்காட்ட வேண்டும்.

ஜனாதிபதி தனக்கு இருக்கக் கூடிய நிறைவேற்று அதிகாரம் - பொது மன்னிப்பு என்பனவற்றை மையமாகக் கொண்டு தமிழ்க் கைதிக்ளை விடுதலை செய்ய முடியும்.

அதேவேளை காபந்து அரசின் பிரதமராக இருக்கும் ரணில் தமது அமைச்சரவைக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களினூடே கைதிகளின் விடுதலைக்கு உதவ முடியும்.

தமது விடுதலைக்காக கூரையேறி எத்தனையோ தடவைகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் கைதிகள் ஈடுபட்ட போதிலும் இன்றுவரை அவர்களுக்கு விடுதலை கிடைக்கவேயில்லை.

கைதிகள் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்ட போதெல்லாம், உத்தரவாதங்களை வழங்கியவர்கள், இன்று அவர்களை ஏமாற்றி விட்டு நாமே தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்போமெனக் கூறிவருகின்றனர். இத்தகைய ஏமாற்று வித்தைகள் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாது என்பதால் தென்னிலங்கைச் சிறைகளில் வருடக் கணக்கில் வாடும் அப்பாவித் தமிழ்க் கைதிகளை விடுவித்து தமது சமாதான உணர்வை வெளிப்படுத்த தென்னிலங்கைக் கட்சிகள் முன்வரவேண்டும்.

# தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட வேண்டும்

## மன்னார் மறைமாவட்ட ஆயர்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் ஜனநாயகத்தின் மறுதலிப்பு என மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி இராயப்பு ஜோசப் தெரிவிததுள்ளார்.

மன்னார் நகர சபை மண்டபத்தில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் நேற்று முன்தினம் நடத்திய கருத்தரங்கில் பேசிய போது ஆயர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

இந்தச் சட்டம் காரணமாக மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.இச்சட்டம் கொண்டுவரப்பட்டு 25வருடங்கள் கழிந்த நிலையில் தமிழர்கள் பல துன்பங்களைச் சந்தித்துள்ளனர்.

இச்சட்டத்தின் கீழ் அப்பாவிகள் பலர் சிறையில் தள்ளப் படடுள்ளனர். எனவே இச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். அப்பாவித் தமிழர்கள் பலர் 15வருடங்களாகியும் விசாரணையின்றி சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை கவலைக்குரியது.ஏனைய குற்றவாளிகள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படடு சமூகத்துடன் இணைந்துள்ளது போன்று, தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களும பொது மன்னிப்பின் கீழ விடுதலை செய்யபபட வேண்டும் என்றும் கேட்டுக் கொணடார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய புண்ணிய சாரதேரர் பயஙகரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் நிரபராதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும. ஏனையவர்கள் சாதாரண சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேணடும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியும் கலந்து கொண்டு உரையாற்றினார். (உ-2)

# வாக்குச் சாவடிக்கான அனுமதி மறுப்பு

# தமிழர் மீதான ஆயுத வழிமுறைத் திணிப்பு

## முல்லை மாவட்ட கமக்கார அமைப்புக் கண்டனம்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்குச் சாவடிகளை அமைபபதற்கு ஜனாதிபதியும் அவரது படைகளும் ஜே.வி.பியும் மறுப்பது தமிழினம் தமது அரசியல் அபிலாஷைகளை பெற்றுக் கொள்ள ஆயுதவழியைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தைத திணிப்பதாகவே உள்ளதாக முல்லை மாவட்ட கமக்கார அமைப்பு தேர்தல் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் நாள நடைபெற இருக்கும் 13வது நாடாளுமன்ற பிரதிநிதிகள் தெரிவுக்கான வாக்குச்சாவடிகள் எமது பகுதியில் அமைப்பது பாதுகாப்பில்லை என்ற சாட்டினைத் தெரிவிப்பதுடன், சட்டமும் படைகளும் ஜனாதிபதியும் இடம் கொடுக்கவில்லையென தட்டிக்கழிக்க முயல்வதானது ஆயுதவழி மூலம் தான் எங்கள் அரசியல் அபிலாஷைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிப்பதாகவே எண்ணத்தோன்றுகிறது.

ஸ்ரீலங்காப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில கொத்தணி முறையில் வாக்குச்சாவடி அமைக்கும் படியும் அதில் வாக்காளர்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிப்பதனையும் செய்திகள் மூலம் அறிவோம்.

நாம் எமது பகுதியில் பூரண பாதுகாப்புடன் தான் வாழ்ந்து வருகின்றோம் என்பதனையும்எமது பகுதியிலிருந்து 55 கிலோ மீற்றர்வரை சென்று தமது கட்டுப்பாட்டிலுள்ள ஓமந்தை கொத்தணி வாக்குச் சாவடிகளில் வாக்களிக்கக் கூடிய நிலையில எமது மக்கள் இல்லை என்பதனையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

எனவே எமது பகுதி மக்கள் தங்கள் நாளாந்த கடமைகளைச் செய்துகொண்டு, இந்த அரசாங்க சட்டமுறையை மாற்றியமைக்கக் கூடிய நாடாளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யக் கூடியதாக வாக்குச்சாவடிகளை எமது பகுதியில்அமைத்துத்தருமாறு எமது மக்கள்சார்பில் வேண்டிக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

இதன் பிரதிகள் ஜனாதிபதி ,பிரதமர், தேர்தல திணைக்கள ஆணையாளர், அதிகாரிகள்,மனித உரிமைகள ஆணைக்குழு அதிகாரி, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், முல்லை மாவட்ட அரசஅதிபர் ஆகியோருககும் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (உ)

## ஆளணிப் பற்றாக்குறையால் மீளக் குடியமர்ந்தோர் சிரமம்

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் பணி மனையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறையால் மீளக் குடியமர்ந்த மக்களின் மீளக்குடியேற்றக் கொடுப்பனவுகள் மற்றும் நஷ்ட ஈடுகள ஆகியனவற்றைப் பெற்றுக் கொள்வதில் பலத்த தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் முற்றாக இடம் பெயர்ந்த இப்பகுதி மக்கள் தற்போது மீளக்குடியேறித் தமது புது வாழ்வைத் தொடங்கியுள்ளனர்.

இபபிரதேச செயலர் பணிமனையில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,கணக்காளர் மற்றும் 19 எழுதுநர்கள் பதவிகள வெற்றிடமாகவுள்ளன.

ஐந்து எழுதுவினைஞர்களும், ஒரு தட்டெழுத்தாளரும் நான்கு, சிற்றூழியர்களும்பிரதேச செயலரும் மட்டுமே அலுவலகக் கடமைகள் அனைத்தையும் செய்யவேண்டியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-35)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.

சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிரக் கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

சுவாமி விவேகானந்தர்.

# பொலித்தீன் பாவனை பளையிலும் இல்லை

(மருதங்கேணி)

கடந்த மாதம் 15ம் திகதி தொடக்கம் பளை பிரதேசத்தில பொலத்தீன் தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளா விடுத்த அறிவத்தலைத் தொடர்ந்து பளை நகரப பகுதியில்உள்ள அனைத்து உணவகங்களிலும் வாழை இலை, தாமரை இலைகளைப் பாவிப்பதாகத் தெரிவியவந்துள்ளது.

இந்த நடைமுறையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் வண்ணம இபபகுதி வர்த்தக சங்கம் மற்றும் வருவாய்ப்பகுதி, வர்த்தக உரிமையாளர்கள் அனைவரையும் பளை பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

இதேவேளை,கடந்த வாரம்பளைப் பகுதிக்கு விஜயம் செய்த கிளி.சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பளை சுகாதார பரிசோதகர், பிரதேச சபையினர் இணைந்து உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், மன்சந்தை போன்றவற்றில் திடீர் சோதனையிட்டு பொலதீன் பாவனைஇல்லை என்பதை உறுதி செய்துள்ளனர். (உ-35)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திறகுடபட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான கண்ணிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 3,4,.6,7 ஆகிய திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்திலும யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

யுனிசெவ் அனுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிபபாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (தி-3)

## தவக்கால சிந்தனை-08

நாட்டிலேயே சிறந்த'மாதிரி மாநிலமாக' ஆக்கிக் காட்டுவேன்.மாவட்டத்திலேயே "மாதிரிக் கிராமம்" ஆக்கத்திட்டம்.மறைமாவட்டத்திலேயே "மாதிரிப் பங்காக்குவோம்"இவ்வகையான மாதிரிமாநிலம், மாதிரிக்கிராமம்,மாதிரிப்பங்கு சும்மாவா வந்து விடும்! அதற்கேற்ற பற்று,தியாகம் மற்றும் உழைப்பு இருக்கவேண்டும். மனமாற்றத்திற்கு மாதிரியாக இதே ஒருநகரம்!நினிவேயை இயேசு சுட்டிக் காட்டுகின்றார். கடவுளின் செய்திவந்த போது இநநகர மக்கள் உண்மையிலேயே மனம் வருந்தி தியாகம்,ஒறுத்தல், நோன்பிருந்து கடவுளின் விடுதலையைப் பெற்றார்கள். நமது மீட்பு தந்திரத்தால காய்ப்பதல்ல.உண்மையான மனமாற்றத்தில் வருவது. இம்மனமாற்றத்தின் வெளிப்பாடு இறை வேண்டல்,தியாகம், ஒறுத்தல்,நோன்பு மற்றும் பிறரன்பு நினிவே நகரத்து மக்கள் நமக்கு "மாதிரியாக" அமைவார்களாக.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

## எம்மால்...

இப்போது அவற்றைப்பற்றி அதிகம் கூறமுடியாது.

பேச்சுக்களின் முடிவில் ஒரு தீர்வு எட்டப்படுமாயின், அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தினுள் கலந்து விடுவார்கள் என்பதே எமது நம்பிக்கை. கடந்த 2 வருடங்களாகப் புலிகள் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்துள்ளனர். இது ஜனநாயக அமைப்புகள் மற்றும் சுதந்திர சந்தைக் கட்டமைப்புடனான சமூக வாழ்வு என்பவற்றுடன் இணைந்து செல்லும் போக்கை கொண்டிருப்பதுபோல் தெரிகிறது.

முதலில் ஒவ்வொரு தரப்பில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியைச் சேர்த்துப் பேசுவது பற்றி நாம் புலிகளுடன் பேசுவோம். அவர்கள் மறுத்தால் நாம் மட்டும் அவர்களுடன் தனியாகப் பேசிவிட்டு, ஏனைய தரப்பினருடன் தனியான குழுப்பேச்சுக்களை ஏககாலத்தில் நடாத்தும் ஒழுங்குகளை செய்யலாம. இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ந-6)

## கண்காணிப்புக்குழு கூட்டமைப்புடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று மாட்டின் வீதியில் உள்ள கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது கிளிநொச்சியில் தேர்தலை நடாத்துவது தொடர்பாகவும், யாழ்.குடாநாட்டில் தேர்தல் தொடர்பாக கட்சிகளின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.(ச)

## குண்டுவெடிப்பு

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனைப் பாடசாலையில் நேற்றுமாலை குண்டு ஒன்று வெடித்தது. இதன் காரணமாகப் பாடசாலைக் கட்டடமொன்றின் கூரை தகர்க்கப்பட்டுள்ளது.

பி.ப.3.00 மணியளவில் இக்குண்டு வெடித்ததால் உயிர்ச்சேதம் எதுவும ஏற் படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் குறித்துப பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## வேட்பாளர்கள்...

டுள்ளதாகவும், இக்கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும் ஈ.பி.டி.பியினர் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் மூலம அறிவித்துள்ளனர். எனினும், இதனை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (ம)

## மட்டு வேட்பாளர்...

டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாவது,

பாராளுமன்றத் தேர்தல்கள் யாவும் அரசியல் வன்முறைச் சம்பவங்கள் சூழ்ந்த நிலையிலேயே நடத்தப்பட வேண்டும் என்பதைச் சென்ற பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ம)

## தேசிய...

யைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பாவித்து அதனைத் துஷ்பிரயோகம் செய்வதாக லொத்தர்சபை ஊழியர்கள் ஜனாதிபதிக்குப் பல தடவைகள் முறைப்பாடு செய்திருந்ததையடுத்தே அவர் லொத்தர் ச்சபையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

லொத்தர்சபையின் நிதியைக் கொண்டு பிளாஸ்டிக் கதிரைகள் உட்பட தேவையற்ற பொருட்கள் சுமார் 2.5 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிகளை ஓட்டும் குழுவொன்றுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாவரை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்ட நகரசபை உறுப்பினர்கள் சிலருக்கு முச்சக்கரவண்டி கொள்வனவு செய்ய நிதியுதவிகளை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தனது அறிக்கையில் அரசின்மீது குற்றஞ் சாட்டியுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்துப் பொருளாதார மறு சீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அவரது அமைச்சுப் பொறுப்புக்களை நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியிடம் ஜனாதிபதி ஒப்படைத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (ம)

# பிரபாவைக் கைதுசெய்யாமைக்கான காரணத்தை தெரிவிக்க அவகாசம்

## குற்றப்புலனாய்வுக்கு நீதிமன்றம் வழங்கியது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைக் கைதுசெய்ய முடியாமைக்கான காரணத்தைத் தெரிவிப்பதற்குக் கால அவகாசம் தருமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.எம்.ஜி.பி.கொட்டகதெனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின்போது முத லாவது பிரதிவாதியாக ஆஜராகிய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இக் கால அவகாசத்தைக் கோரியுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு வழக்குத் தீர்ப்பில் கொழும்பு உயர் நீதிமன்றம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை குற்றவாளியாகத் தெரிவித்து 2002ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ம் திகதி 200 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்தது, இதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பணிப்புரை விடுக்குமாறும் முன்னாள் பிரதிப்பொலிஸ் மா அதிபர் தனது மனுவில் கேட்டிருந்தார்.

இவ்விசாரணையின் போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கையை அடுத்து கொழும்பு மேல் நீதிமன்றம், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்ய முடியாமைக்கான காரணத்தை இம்மாதம் 30ம் திகதி நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு கால அவகாசம் கொடுத்துள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசிங்கம் சோதிப்பிள்ளை

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் சோதிப்பிள்ளை 02.03.2004 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் மனைவியும் கௌரீஸ்வரி (டென்மார்க்), சிவகுமார் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி, குகனேஸ்வரி (விரிவுரையாளர் யாழ்.கல்வியற் கல்லூரி), செல்வக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும், இராசேந்திரன் (டென்மார்க்), கௌரி (சுவிஸ்), பரமேஸ்வரன், வேல்நிதி (கணக்காளர் பிரதேச செயலகம், வேலணை), ஜமுனா(சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், திலஷ்சன், டிலுக்ஷன், தனுஷ், அனோஷ், வினோஷ், தனோஜா, ரதீஷன், தவீஷன், ஓவியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு உரும்பராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஒஸ்கா (வேம்பன்) வீதி.
உரும்பராய் தெற்கு. உரும்பராய். (8421)

தகவல்:
மக்கள், மருமக்கள்

தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை
முதலாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)

யாழ் மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

யாழ்.மண்ணில் முதன்முறையாக இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த
Praba's Institute of Beauty Theraphy & Health Care Management



நிறுவனத்தின் இயக்குநரும் தியாகராஜர் Poly Technic இனதும் காமராஜர் பல்கலைக்கழகத்தின் மூலிகை அழகுக்கலை துறையின் விரிவுரையாளருமான திருமதி பிரபாரெட்டி (M.A.M.S) அவர்களும் அவரது குழுவினரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

✵ 29.02.2004 ஞாயிற்றுக்கிழமையன்று நடந்து முடிந்த அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கில் இவ் அழகுக் கலையை விரும்பி ஆர்வமாக பயில நூற்றுக்கணக்கானோர் கேட்டதற்கிணங்க 3 பிரிவுகளாக இவ்வகுப்புக்களை நடாத்த திருமதி பிரபாரெட்டி அவர்களும் அவர்களது குழுவினரும் தீர்மானித்துள்ளனர்.

✵ ஒவ்வொரு பிரிவினருக்கும் 7 நாள் பயிற்சி வகுப்பும் உங்கள் புகைப்படம் பொறிக்கப்பட்ட பெறுமதிமிக்க சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

✵✵✵ இப்பயிற்சி வகுப்பில் இணைய விரும்புவோர்: இல.167, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம் "யாழோசை விளம்பர சேவைக்" அருகில் உங்களுக்கான விண்ணப்பப் படிவத்தினை பெற்று யாழ்.மண்ணின் மாணவர்களுக்கான மிகக்குறைந்த கட்டணமாகிய ரூ.6,000/= ஐ செலுத்தி உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

✵✵ அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

இடம் : Y.M.C.A கட்டிடம் (கச்சேரிக்கு முன்பாக) இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 06.03.2004 சனிக்கிழமை.
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை

குறிப்பு : வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களின் நலன் கருதி வகுப்பு முடிவடைந்ததும் வாகன வசதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு :- தொலைபேசி: 024-4-589743, 071-2346781, 077-6070581

(8420)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.